Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, NOVEMBER 11, 2022

வெள்ளிக்கிழமை, 11 நவம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 141 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE




அடுத்த ஆண்டு இறுதியில்

# பொருளாதாரம் மீட்சிப் பாதையில் பிரவேசிக்கும்

இலங்கைப் பொருளாதாரமானது 2022இன் முதல் அரைப்பகுதி கடுமையான சவால்களுக்கும், உயர்வடைந்த நிச்சயமற்ற தன்மைகளுக்கும் முகங்கொடுத்து நடுத்தர காலத்தில் உறுதியானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான வளர்ச்சிக்கான பாதையில் பொருளாதாரத்தினை வழிநடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட அநேகமான பல்முனைத் தாக்கத்துடன் கூடிய கொள்கைத் தலையீடுகளினால் துணைபுரியப்பட்டு,

தொடர்ச்சி P2

# சாரா உயிரோடு இருக்கிறார்

**உயிரிழந்துவிட்டதாக அரசாங்கம் நிரூபிக்கப் பார்க்கிறது**

**ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் சாரா ஜெஸ்மின் என்ற பெண்ணே உயிர் பிழைத்தவர்**

பா.நிரோஸ்



ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சாரா ஜெஸ்மின் உயிரோடு இருப்பதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், சாரா ஜெஸ்மினை தேடுவதற்குப் பதிலாக, சாரா உயிரிழந்துள்ளதாக நிரூபிப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது எனவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானுடன் இருந்து ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் சாரா ஜெஸ்மின் என்கிற பெண்ணே உயிர் பிழைத்தவர். சாரா உயிரிழக்கவில்லை என சஹ்ரானின் மனைவி ஜனாதிபதி

தொடர்ச்சி P2



75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

**தமிழர் தரப்புடன் அடுத்தவாரம் பேச்சுவார்த்தை**

**உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம்**

பா.நிரோஸ்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்குள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கப்பார்ப்பதாகத் தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

தொடர்ச்சி P2




# பகடிவதை புகார்களை இனி சீ.ஐ.டி விசாரிக்கும்

பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்படும் பகடிவதைகள் தொடர்பாக பெறப்படும் முறைப்பாடுகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு (சீ.ஐ.டி) விசாரணைகளுக்காக அனுப்பி வைக்குமாறு, அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, நேற்று (10) பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# டயானாவுக்கு எதிரான வழக்கை உடன் விசாரிக்குமாறு உத்தரவு



இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், செல்லுபடியாகும் வீசாவை அவர் வைத்துள்ளாரா என்பதை உடனடியாக விசாரித்து, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (10) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# வசந்த முதலிகேவை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துக

**உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை உடனடியாக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துமாறு உயர் நீதிமன்றம், நேற்று (10) இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

நீதியரசர்களான விஜித் மலல்கொட மற்றும் எஸ். துரைராஜா ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன்,

தொடர்ச்சி P2



# குருந்தூர் மலை விவகாரம்: மூவருக்கு பிணை

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறாகச் செயற்பட்டதாகத் தெரிவித்து பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2



# முதலாவது லங்கா சுப்பர் டீசல்...

திருகோணமலை எண்ணெய் குதத்திலிருந்து இலங்கை சந்தைக்கு வழங்கப்படும் முதலாவது லங்கா சுப்பர் டீசல் விநியோகத்தை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று (10) ஆரம்பித்துவைத்தார்.
இதன்போது , இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பங்குப்பற்றியிருந்தார்.
இலங்கையின் இரு நண்பர்களிடையிலான நெருக்கமான ஒத்துழைப்பினை பாராட்டிய லங்கா ஐஓசி (LIOCO) நிறுவன அதிகாரிகள், இலங்கையின் சக்திப்பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கும் LIOC செயற்பாடுகள் தொடர்பாகவும் இரு பிரமுகர்களுக்கும் விளக்கமளித்தனர்.

# சதிகள் வேண்டாம் தேர்தலை நடத்தவும்

**நாட்டை அழித்த ராஜபக்ஷக்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பெற வெட்கமில்லையா – சஜித்**

எமது நாட்டை ஆபத்தில் ஆழ்த்திய மொட்டு அரசாங்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் மீண்டும் எழுச்சி பெற முயற்சிப்பதாகவும்,நாட்டை அழித்த ராஜபக்ஷக்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பெற வெட்கமில்லையா என கேட்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ , நாட்டை அழித்த ராஜபக்ஷ குடும்பத்திற்கும் மொட்டுவிற்கும் மக்கள் மறக்க முடியாத பதிலை வழங்க தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# விஜேவீரவுக்கு என்ன நடந்தது?



**விசாரணையே இடம்பெறவில்லை என்கிறது அரசாங்கம்**

பா.நிரோஸ்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹன விஜேவீர கைது செய்யப்பட்டதாகவோ அல்லது உயிரிழந்துள்ளதாகவோ எந்த ஆவணங்களும் இல்லை என பாராளுமன்றத்துக்கு

தொடர்ச்சி P2

சனத் நிஷாந்த விவகாரம்

# அவமதிப்பு தொடர்பான வீடியோக்களை வழங்கவும்



நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாக் கூறப்படும் வீடியோ காட்சிகளை மன்றுக்கு முன்னிலைப்படுத்துமாறு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (10) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

கடன் மறுசீரமைப்பு தொடர்பான

# பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

**உலக வங்கித் தலைவர் ஜனாதிபதிக்கு வலியுறுத்து**

தற்போதைய கடன் நெருக்கடிக்கு, உரிய தீர்வை உரிய நேரத்தில் காண வேண்டியது அவசியமென உலக வங்கித் தலைவர் டேவிட் மல்பாஸ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்விடம் தெரிவித்துள்ளதுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்களை உரிய தரப்புக்களுடன் தொடருமாறும் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் உலக வங்கித் தலைவர் டேவிட் மல்பாஸ்ஸிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று எகிப்தின் ஷாம் அல் ஷேக் நகரில் நடைபெற்றது.

இலங்கையில் சவாலுக்குள்ளாகியுள்ள பேரண்டப் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமை தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர்.

தொடர்ச்சி P2




எம்.பிக்களுக்கான

# கடிதங்கள் தயார் நிலையில்

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து, பொறுப்பு பற்றிய பிரகடனங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துமாறு அழைப்பதாகவும், இந்த அழைப்பிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் செவிசாய்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா, ஓர் பிரஜை எனின், பிரகடனங்களை பொதுவில் வெளிப்படுத்துமாறு உறுப்பினர்களை கோருங்கள் எனவும் வலியுறுத்தியுள்ளது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# சாரா உயிரோடு இருக்கிறார்

ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியுள்ளார். சாரா தொடர்பில் இரு தடவைகள் டி.என்.எ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரு டி.என்.எ பரிசோதனைகளின் ஊடாக சாரா இன்னும் உயிரிழக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சரும் சாரா உயிருடன் இருப்பதாக சந்தேகிப்பதாகக் தெரிவித்து டி.என்.ஏ பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார். இவ்வாறு மூன்று தடவைகள் டி.என்.ஏ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் கல்முனை சம்பவத்தில் சாரா இறக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சாரா உயிரோடு இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

# விஜேவீரவுக்கு என்ன நடந்தது?

அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல, ரோஹனவின் கைது, உயிரிழப்பு தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வாய்மூல விடைக்கான வினாக்களை எழுப்பியிருந்தார்.

இதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபைப்படுத்தியுள்ள ஆவணங்களிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜேவீர கைது மற்றும் மரணம் தொடர்பில் 1989ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம், 18ஆம், 21ஆம் திகதிகளில் தினமின பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அதனை சபைப்படுத்தியுள்ளார். ரோஹன விஜேவீரவின் மரணம் இயற்கையானதா என்பது தனக்கு தெரியாது எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவில் வழங்கியுள்ளார்.

இதேவேளை ரோஹன படுகொலை செய்யப்பட்டாரா என்பது தெரியாது எனவும், ரோஹனவின் உயிரிழப்பு அல்லது கைது தொடர்பில் பொலிஸாரோ அல்லது சி.ஐ.டியோ விசாரணைகளை மேற்கொள்ளவில்லை எனவும் பதில் வழங்கியுள்ளார்.

# வசந்த முதலிகேவை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துக

அவரை, கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்துமாறும் நீதியரசர்கள் குழாம் கட்டளையிட்டது.

அரசியலமைப்பின் 12(1), 13(1) மற்றும் 13(2) ஆகிய பிரிவுகளின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை மனுவை ஜனவரி 31ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த மனுவில் மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை 7ஆவது பிரதிவாதியாக பெயரிடுவதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அனுமதி வழங்கியது.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் பணிப்பாளர் காவிந்த பியசேகர, பயங்கரவாத புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் பிரசன்ன அல்விஸ், சட்டமா அதிபர் உட்பட பலரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகளின் கீழ் தம்மைக் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பது சட்டபூர்வ தன்மையை மனுதாரர் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார்.

குறித்த மனுவில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தம்மை, சட்டத்தின் அடிப்படையில் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

அடுத்த வாரம் வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும், இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கலந்துகொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில், சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு, பயங்கரவாத ஒழிப்புச் சட்டம், ஊழலை ஒழிப்பதற்கான சட்டம் ஆகியன தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதனை ஜனவரி அல்லது பெப்ரவரியில் நீதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார். அதேபோல் வடக்கு தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்டுள்ள பல தமிழ் கைதிகளை நாம் விடுதலை செய்துள்ளோம். பலரை நாம் விடுதலை செய்யவுள்ளோம். தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். காணாமல்போனோர் தொடர்பாக தற்போது 2000 கோப்புகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியவற்றையும் விரைவாக நிறைவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தியுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த வாரம் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும், இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் கலந்துகொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுத்தார். இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் வருவதற்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க எதிர்பார்க்கிறேன். இலங்கைக்குள் தலையீடுகளை மேற்கொள்ளும் தேவை எவருக்கம் இல்லை. உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொண்டு முன்னோக்கி செல்லவே எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவித்தார்.

# பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

இச்சந்திப்பின்போது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டியதன் உடனடி தேவைக் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அரச துறையிலுள்ள அதிகரித்த ஊழியர் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு பொதுச் செலவினங்களை வினைத்திறனுடன் கையாள்வதற்கான வழிகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அவசியமான மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். இலங்கை மக்களின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நிலையான தனியார்துறையின் வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கும் அவசியமான சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் சலுகை அடிப்படையிலான நிதியுதவி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றை கொள்கை ஆலோசனைக்கமைய உலக வங்கிக் குழுமம் வழங்கும் என்றும் அதன் தலைவர் இதன்போது உறுதியளித்தார்.

விவசாய உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கான உரப் பயன்பாடு மற்றும் பெறுமதியை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்தும், சேவைத்துறையில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் சுற்றுலா மற்றும் கல்வி ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், காலநிலை மாற்றம் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களைத் தணிப்பதற்கும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நிதி தேவை என்பன தொடர்பிலும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன.

# குருந்தூர் மலை விவகாரம்: மூவருக்கு பிணை

அதேவேளை குறித்த வழக்கானது எதிர்வரும் 02.03.2023 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காக திகதியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 12.06.2022 அன்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சிக்கப்பட்டன.

பௌத்தபிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச்சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து இதனை முன்னெடுத்திருந்தனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயகரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்கமுற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொதுமக்களோடும் மக்கள் பிரதிநிதிகளாக இணைந்து ஜனநாயகவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் தேரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்தனர்.

பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைவாக கடந்த 02.09.2022 அன்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களையும் வழங்கியிருந்தனர்.

அந்தவகையில் பௌத்த துறவிகளுக்கும், அவர்களுடன் வழிபாடுகளுக்காக வந்த குழுவினருக்கும் அச்சுறுத்தல் விடுத்தமை, அவமானம் ஏற்படுத்தும் வகையில் நடந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து B/688/22 என்னும் வழக்கிலக்கத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள், 10.11.2022இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளதும், பொலிஸாரினதும் வாதங்களைச் செவிமடுத்த நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜூட் நிக்சன் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், 02.03.2023ஆம் திகதிக்கு விசாரணைகளுக்காகதிகதியிட்டுள்ளார்.

# டயானாவுக்கு எதிரான...

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் (சீ.ஐ.டி) பொறுப்பதிகாரிக்கே மேற்குறிப்பிட்ட உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் சீ.ஐ.டியினர், நீதிமன்றில் தெரிவித்த உண்மைகளை கருத்திற்கொண்ட பிரதான நீதவான், வழக்கை டிசெம்பர் 15ஆம் திகதி அழைப்பதற்கு தீர்மானித்துடன், விசாரணை அறிக்கையை அன்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

# அவமதிப்பு தொடர்பான...

நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான இலங்கை நீதிச் சேவை சங்கம் மற்றும் சட்டத்தரணி பிரியலால் சிறிசேன, பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக தாக்கல் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த மனுக்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன முன்னிலையில் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

முறைப்பாட்டாளர் தரப்பு, இராஜாங்க அமைச்சருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஹஷினி ஓபதா மன்றுக்கு அறிவித்தார்.

குறித்த மனுக்கள் தொடர்பான பரிசீலனை டிசம்பர் 12ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவித்த நீதியரசர், அடுத்த வழக்குத் தவணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இராஜாங்க அமைச்சருக்கு உத்தரவிட்டார்.

# பொருளாதாரம் மீட்சிப் பாதையில் பிரவேசிக்கும்

ஆண்டின் இரண்டாமரைப் பகுதியில் இதுவரையில் உறுதியடைவதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அடுத்த வருட இறுதியில் இருந்து நாட்டின் பொருளாதாரம் மீட்சிப் பாதையில் பிரவேசிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள், "2022இன் முக்கிய பண்புகளும் 2023இற்கான வாய்ப்புக்களும்" எனும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆண்டின் தொடக்கத்திலிருந்து வரலாற்று ரீதியிலே உயர்ந்த மட்டத்திற்கு பணவீக்கத்தின் உறுதியான உயர்வானது கொள்வனவு ஆற்றலினை வலுவிழக்கச் செய்தது. இந்த முரண்பாடான பணவீக்கத்தின் உயர்வானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிரம்பல்பக்க இடையூறுகள், நிருவகிக்கப்படும் விலைகளில் காலதாமதமாகச் செயற்பட்ட திருத்தங்கள், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் சடுதியான பெறுமானத் தேய்வு மற்றும் அண்மைய கடந்த காலத்தில் இடம்பெற்ற நாணய இலகுபடுத்தலின் காலம் கடந்த தாக்கத்திலிருந்து தோற்றம்பெற்ற மட்டுப்படுத்தப்பட்டிருந்த கேள்வி அழுத்தங்களின் விடுவிப்பு போன்றவற்றினால் உருவாகியது.

மேலும், 2019இன் இறுதிப்பகுதியிலிருந்து தாழ்ந்த வரி முறைமையுடன் கூடிய விரிவாக்கப்பட்ட இறைக் கொள்கையானது கூட்டுக் கேள்வியினை நேரடியாக உயர்வடையச் செய்தது மாத்திரமன்றி தரமிடல்களின் கீழ் நோக்கிய திருத்தங்களினைத் தொடர்ந்து பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்கான அணுகுவழி கிடைக்காமைக்கு மத்தியில் விரிவடைந்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நாணய நிதியிடலையும் தேவைப்படுத்தியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பகடிவதை புகார்களை இனி சீ.ஐ.டி விசாரிக்கும்

அதற்கமைய பகடிவதைகள் தொடர்பாக நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெறப்படும் முறைப்பாடுகளை சீ.ஐ.டிக்கு அனுப்பப்பட்டு அவர்களால் விசாரிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டத்துக்கு அமைய கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்க மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து, கடந்த சில நாட்களாக பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

சமூக ஊடகங்களில் ஆபாசமான வீடியோக்களை அனுப்பி பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒருவரை பகடிவதை மற்றும் துன்புறுதியமை தொடர்பில் பேராதனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், களனிப் பல்கலைக்கழகத்தின் 2ஆம் ஆண்டு மாணவர் ஒருவரை, மூன்று மாணவர் ஒன்றிய மாணவர்கள் தாக்கியதாக கிரிபத்கொட பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

மற்றொரு மாணவர் குழு, களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆறு பேரை தடுத்து வைத்து விசாரணை நடத்தியதாக களனி பொலிஸாருக்கு மற்றுமொரு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சதிகள் வேண்டாம் தேர்தலை நடத்தவும்

பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு தேர்தலை ஒத்திவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் மக்கள் தேர்தலையே கோருகின்றனர் எனவும், எனவே ஒரு சிறந்த சமூகவாதியாக இருந்தால் தேர்தலை ஒத்திவைக்காமல் உடனடியாக தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை விடுப்பதாகவும், அரசாங்கத்தின் தேர்தலை ஒத்திவைக்கும் சதியில் தாம் பங்குதாரராக வேண்டாம் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நொச்சியாகம பிரதேசத்தில் அன்மையில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பத்தலேகொட ஆராய்ச்சி நிறுவனம் 11 வருடங்களில் 22 பருவ போக நெற்செய்கை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நெற் செய்கைக்கு சேதன பசளைகளை மாத்திரம் பயன்படுத்தினால், நெற் செய்கையின் விளைச்சல் 21.5 இல் இருந்து 31 சதவீதமாக குறையும் என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அதுமட்டுமல்லாமல், நெல் விளைச்சலை அதிகபட்ச நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய முறையானது, நெற் செய்கைக்கு சேதன மற்றும் இரசாயன உரங்களின் கலவையிலான செய்கையே எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த தரவுகள் அனைத்தும் அரசியல்வாதிகளாலன்றி, இந்நாட்டின் புத்திஜீவிகளாலையே கண்டறியப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இருந்தும், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இந்த அறிக்கைகளை புறக்கணித்து நெற் செய்கை, தேயிலைச் செய்கை மற்றும் பழ உற்பத்திச் செய்கை போன்ற அனைத்து பயிர்களுக்கும் வழங்கப்பட உரங்களை தடை செய்ததாகவும், இதன் மூலம் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகளின் வாழ்வு பறிபோனதாகவும், இதனால் கடந்த பெரும் போக விளைச்சல் 50 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி கூறுவது போன்று 10,000 ரூபாவிற்கு அதிகபட்ச உரம் கிடைத்தாலும், அது ஒரு ஊடக அறிக்கையாக அல்லது ஜனாதிபதியின் உரையாக மட்டுமே உள்ளதாகவும், அது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகப்போயுள்ளதாகவும் தெரிவித்தார்.

# உணவுப் பஞ்சம் ஏற்படாது



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

அடுத்த வருடம் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாதென தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கு உதவிசெய்த நாடுகளுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, அடுத்த வருடம் இலங்கை உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்காது. இதிலிருந்து மீள்வதற்கு உதவி செய்த நாடுகளுக்கு நன்றியை தெரிவிக்கிறேன். ஆனால், ஆப்பிரிகாவில் நிலைமைகள் மோசமாக உள்ளன. 20 - 30 மில்லின் மக்கள் உணவுப் பஞ்சத்தால்



பாதிக்கப்பட்டுள்ளதோடு, அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயிரிழந்தும் இருக்கிறார்கள் என்றார்.

ஆபிரிக்காவில் சிலருக்கு உணவுகளை உற்பத்தி செய்ய முடியாது. சிலருக்கு உணவுகளை உற்பத்தி செய்ய உரமில்லை. அவர்களிடம் பணமில்லை. அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். உக்ரேனுக்கு உதவியதுபோல சர்வதேச நாணய நிதியம் ஆபிரிக்காவுக்கும் உதவ வேண்டும். உக்ரேன் ரஷ்யாவோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆபிரிக்க மக்களோ வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே உக்ரேனுக்கு வழங்கிய அதே ஒத்துழைப்புகளை ஆபிரிக்காவுக்கும் வழங்க வேண்டும் என்றார்.

சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களை

# பொதுமன்னிப்பில் விடுதலை செய்க

## எதிர்க்கட்சி கோரிக்கை

நாட்டில் வறுமை அதிகரித்துள்ளதால் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன. இதனால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் எம்.பியுமான லக்ஷமன் கிரியெல்ல, சிறிய குற்றங்களுக்காக சிறைச்சாலைகளில் உள்ளவர்களை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், எவருக்கும் அச்சப்படாது தேர்தலை நடத்தினால் அவர் வரலாற்றில் பேசப்படுவார். எனவே, அவர் தேர்தலை நடத்த வேண்டும். சட்டமா அதிபரின் ஆலோசனையை அவர் பெற வேண்டிய அவசியமில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயார் எனவும் அறிவித்தார்.



நாட்டு மக்களும், நாடும் வங்குரோத்தடைந்துள்ளது. இதனால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகிறன. நாட்டில் ஏழ்மை அதிகரித்துள்ளதால் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன. எனவே, சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ள அனைவரையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த அரசாங்கத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமா என்ற பிரச்சினை எழுகிறது எனவும் தெரிவித்தார்.

இருவரின் உயிருக்கும் ஏதும் நேர்ந்தால்

# விளைவுகளை சந்திக்க நேரிடும்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேவும், சிறிதம்ம தேரரும் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என தெரிவிக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இருவரின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டால் அரசாங்கம் பாரிய விளைவுகளை சந்திக்கும் எனவும் எச்சரித்தார்.

இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்று, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதும், எனக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி 30 மாதங்கள் என்னை சிறையில் அடைத்தார்கள். அப்போதைய ஜனாதிபதியே எனக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேவை பார்க்க தங்காலை முகாமுக்கும் சென்றிருந்தபோது அவரை கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைத்து சென்றதாக கூறினார்கள். ஆனால், தங்காலையில் இருந்து அவர் அழைத்துச் செல்லப்பட்டது எவருக்கும் தெரியாது. வசந்த முதலிகே பயங்கரவாதியா? என பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் வினவியபோது அதனைக் கண்டறியவே வசந்த முதலிகே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பதிலளித்தார்கள் என்றார்.

காலதாமதமாகியுள்ள

# ஓய்வூதியப் பணிக்கொடையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை



ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்கும்போது கடந்த காலத்தில் காலதாமதமாகியிருந்ததை சரிசெய்வதற்கு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றும்

சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு அமைய திறைசேரியின் அனுமதியைப் பெற்று இரண்டு பகுதிகளாக இக்கொடுப்பனவுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரும், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தலைமையில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியில் திறைசேரியினால் நிதியை விடுவிப்பதில் உள்ள தாமதம் காரணமாக ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெறுவதற்கு அதிகமானவர்கள் இதுவரை காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக ஓய்வூதிய பணிப்பளார் நாயகம் இங்கு தெரிவித்தார்.

தற்பொழுது 2022 ஜனவரி வரையான அனைத்துக் கொடுப்பனவுகளையும் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மேலும் 2022 ஜனவரி முதல் எஞ்சிய காலத்துக்குத் தேவையான நிதியை விடுவிப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அதற்கமைய அந்த நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


# கம்பஹா பிரதேச சபை

# விலைமனுகோரல் விளம்பரம்

**2023 ஆம் ஆண்டுக்கான், இறைச்சி கடை, மீன் கடை, வாரச்சந்தை, பொது மலசலக்கூடம் மற்றும் வெலிவேரிய பொது சந்தைக் கடைகள் மற்றும் கம்பஹா பிரதேச சபை கட்டிடத்திலுள்ள கடைகள் குத்தகைக்கு.**

1. கம்பஹா பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் 2023.01.01 ஆம் திகதி முதல் 2023.12.31 ஆம் திகதி வரை வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்கும் நான்காவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெலிவேரிய பொது சந்தைக் கடைகள் 2023.01.01 ஆம் திகதி முதல் 2025.04.30 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கு சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்பங்கள் 2022.12.02 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. இதற்காக ஆரவமுள்ள விலைமனு விண்ணப்பதாரிகள் 2022.11.11 ஆம் திகதி முதல் 2022.12.01 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை உள்ள நேரத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை பணமாக செலுத்தி எழுத்து மூலமான கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு விண்ணப்பப்படிவத்தை ஹேனரத்கொட உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்காக 033-2220221 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அலுவலகத்திற்கு பொறுப்பான அதிகாரியிடம் அறிந்துகொள்ளமுடியும்.
3. விலைமனு விண்ணபத்தின் முதல் மற்றும் அதன் நகல் இரண்டையும் இணைத்து 2022.12.02 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு " தலைவர் கம்பஹா பிரதேச சபை மிரிஸ்வத்த முதுன்கொட" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பிவைக்க முடியும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திலுள்ள செயலாளரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட முடியும். விலைமனு விண்ணபத்தின் முதல் மற்றும் அதன் நகல் இரண்டையும் இணைத்து கடிதவுரையில் இட்டு கடிதவுரையின் இடது பக்க மேல் குத்தகையின் பெயரை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். காலம் கடந்து கிடைக்கப்பெறும் விலைமனு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் கடைசி நேரம் முடிந்தவுடன் வருகை தந்திருக்கும் விலைமனு விண்ணப்பதாரிகள் / முகவர்கள் முன்னிலையில் கம்பஹா பிரதேச சபை பிரதான மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. கடந்த வருடங்களில் டெண்டர்கள் தொடர்பாக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நபர்களுக்கு அல்லது நடப்பு ஆண்டுக்கான டெண்டர்கள் தொடர்பாக நிலுவை தொகையை செலுத்தாத நபர்களுக்கு டெண்டர்கள் வழங்கப்படாது.
5. பிரதேச சபை கடைகளுக்கான குத்தகையை பெற்றுக்கொள்ளும்போது அதற்கு உரிய மூன்று மாத வாடகைக்கு சமமான தொகையை பாதுகாப்பு வைப்புத் தொகையாக வைப்பு செய்ய வேண்டும்.
6. டெண்டர்கள் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கான மாதாந்திர மின் கட்டணம் / தண்ணீர் கட்டணங்களை குத்தகைக்காரர்களால் செலுத்தப்பட வேண்டும்.
7. இந்த டெண்டர்களை ஏற்கவோ அல்லது அனைத்து டெண்டர்களை நிராகரிக்கவோ உள்ளூராட்சி மன்றத்தின் டெண்டர் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**2022.11.10**
**கம்பஹா பிரதேச சபையில்.**
**தொலைபேசி இலக்கம்: 033 -2222020**

**டபிள்யூ. ஏ. ரஞ்சித் குணவர்தன,**
**தலைவர்,**
**டெண்டர் குழு**
**கம்பஹா பிராந்திய சபை**

### முதல் அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய பொது சந்தையின் பன்றி இறைச்சி கடை WF 03 | 1,000.00 | 15,000.00 | 780,000.00 |
| 2 | வெலிவேரிய பொது சந்தையின் ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சி கடை WF 04 | 1,000.00 | 15,000.00 | 330,000.00 |
| 3 | வெலிவேரிய பொது சந்தையின் மீன் கடை WF 08 | 1,000.00 | 5,000.00 | 90,000.00 |
| 4 | வெலிவேரிய பொது சந்தையின் WF 09 | 1,000.00 | 5,000.00 | 90,000.00 |
| 5 | வெலிவேரிய பொது சந்தையின் கருவாட்டு கடை | 1,000.00 | 3,000.00 | 36,200.00 |

### இரண்டாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | இபுல்கொட வார சந்தையில் உள்ள பொது மலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 12,000.00 |
| 2 | கணேமுல்லை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பொது மலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 20,000.00 |

### மூன்றாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | வெலிவேரிய வாராந்த சந்தை (சனிக்கிழமை அன்று) | 1,000.00 | 15,000.00 | 700,000.00 |
| 02 | இபுல்கொட வாராந்த சந்தை (வெள்ளிக்கிழமை அன்று) | 1,000.00 | 5,000.00 | 300,000.00 |
| 03 | மகேவிட வாராந்த சந்தை (செய்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அன்று) | 1,000.00 | 15,000.00 | 500,000.00 |

### நான்காவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 15 | 1,000.00 | 3,200.00 | 64,000.00 |
| 2 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 16 | 1,000.00 | 3,200.00 | 64,000.00 |
| 3 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 25 | 1,000.00 | 3,800.00 | 76,000.00 |
| 4 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 30 | 1,000.00 | 3,200.00 | 64,000.00 |
| 5 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 31 | 1,000.00 | 3,200.00 | 64,000.00 |
| 6 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 32 | 1,000.00 | 3,200.00 | 64,000.00 |

### ஐந்தாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | கம்பஹா பிரதேச சபை கட்டிடத்திலுள்ள கடை இலக்கம் 30 | 1,000.00 | 7,200.00 | 144,000.00 |
| 2 | கம்பஹா பிரதேச சபை கட்டிடத்திலுள்ள கடை இலக்கம் 30 ஏ | 1,000.00 | 7,200.00 | 144,000.00 |



# அறிவித்தல்

**எச்செனிட் (HSENID) பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீ (PQ 00245385)**
**அதிவிசேட பொதுக்கூட்டம்**

**எச்செனிட் (HSENID) பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீ** ("கம்பெனி") இன் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்று ("EGM") பொருத்தமானதாகக் கருதப்பட்டால், கீழ்க்குறிப்பிடப்படுகின்ற தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக, 2022 டிசம்பர் மாதம் 06ஆம் திகதி செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மெய்நிகர் தளம் ஒன்றில் இயங்கலை (Online) மூலம் நடைபெறும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது:

**தீர்மான இலக்கம். 1**
**எச்செனிட் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீயின் ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்தை நிறுவுவதற்கான விசேட தீர்மானம்**

2022 நவம்பர் மாதம் 10ஆம் திததியிடப்பட்ட எச்செனிட் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீயின் "பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை - ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்தில்" விவரிக்கப்பட்டுள்ளவாறு, "எச்செனிட் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீ ("கம்பெனி") மூலம் ஊழியர் ஒருவரின் பங்கு விருப்பத் திட்டத்தை நிறுவுவதற்கும் மற்றும் அமுல்படுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதோடு இத்தால் அங்கீகரிக்கப்படுகின்றது **என இத்தால் தீர்மானிக்கப்படுகிறது"**

**தீர்மான இலக்கம். 2**
**ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்தின் கீழ் பங்குகளை வழங்குவதற்கான விசேட தீர்மானம்**

2022 நவம்பர் மாதம் 10ஆம் திகதியிடப்பட்ட "எச்செனிக் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீயின் பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை- ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்தில்" விவரிக்கப்பட்டுள்ளவாறு, சொல்லப்பட்ட ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்தின் கீழ் கம்பனியின் பங்குகளை வழங்குதல் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதோடு **இத்தால் அங்கீகரிக்கப்படுகின்றது என இத்தால் தீர்மானிக்கப்படுகிறது"**

கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளத்திலும் (www.cse.lk) மற்றும் கம்பனியின் இணையத்தளத்திலும் (www.hsenidbiz.com) வெளியிடப்பட்டுள்ள பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, கூட்டத்திற்கான அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பவற்றுடன் பதிலாள் படிவம் மற்றும் பதிவுப் படிவம் என்பவற்றைப் பார்க்கவும்.

இது தொடர்பில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள, திருமதி. திமுது மதுவந்தி என்பவரை அலுவலக நேரத்தில் 0722 - 357905 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**எச்செனிட் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பீஎல்சீ பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள் / பதிவாளர்கள்**
**2022 நவம்பர் மாதம் 10ஆம் திகதியாகிய இன்று**

hSenidBiz
EMPOWERING PEOPLE THE WORLD OVER

வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்திய தளவாய் கிராம காணிகள்

# உரிய மக்களிடம் மீண்டும் வழங்கப்பட வேண்டும்

ஹஸ்பர்

கிண்ணியா பிரதேசத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் அடாத்தாக கையகப்படுத்தப்பட்ட தளவாய் கிராம காணி, உரிய மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் திருமலை மாவட்ட அமைப்பாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம். எம் நஸ்ரூதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிண்ணியாவில் உள்ள திருமலை மீடியா போரத்தின் ஊடக இல்லத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடக சந்திப்பின்




போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்; தளவாய் கிராம மக்கள் 1990களில் யுத்த சூழ் நிலை காரணமாக வெளியேற்றப்பட்டு, கிண்ணியா நகர் பகுதிகளில் வாழ்ந்து வந்த நிலையில், 30 வருட காலமாகக் காணியை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். தற்போது, இக்காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கபளீகரம் செய்துள்ளது. இம்மக்களின் சொந்த நிலம், உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் 70 குடும்பங்கள் வாழ்ந்தமைக்கான தேர்தல் இடாப்பின் பதிவுகள் ஆதாரங்களாக உள்ளன. ஆனாலும், இம் மக்களுடைய சொந்த காணிகளை அவர்களுக்கு வழங்காமல் வனஜீவராசிகள் திணைக்களம் அடாத்தாகக் கையகப்படுத்தியுள்ளது. இது உரிய மக்களுக்கு சென்றடைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.



மொனறாகலையில் இருந்து கல்முனை நோக்கி

## சைக்கிள் அஞ்சலோட்டம்

நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம் சினாஸ், எம்.என்.எம் அப்ராஸ்

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (13), நீரிழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, இலங்கை இள வைத்தியர்கள் சங்கம், வெல்லஸ்ஸவின் குரல், மொனறாகலை மாவட்ட பொது வைத்தியசாலை, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து, 'சைக்கிளிங் கிரீன்' கழகம் மாபெரும் சைக்கிள் அஞ்சல் ஓட்டத்தை நடத்தவுள்ளது.

இதுதொடர்பாக, மருதமுனை கமு/கமு/அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், 'சைக்கிளிங் கிரீன்' கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட இலங்கை ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர் எம். எப் ஹிபதுல் கரீம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பிரிவின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.எம் றியாஸ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வேலைத்தள பொறியியலாளர் எம்.எஸ்.எம் பஸீல், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்கள்.

மொனறாகலையில் ஆரம்பிக்கும் சைக்கிள் அஞ்சலோட்டம் தொம்பகஹவெல, சியம்பலாண்டுவ, வட்டினாகல, தமண, ஹிங்குறாணை, அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களைக் கடந்து, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சைக்கிள் அஞ்சலோட்டத்தின் இறுதி நிகழ்வு நடைபெறவுள்ளது.

வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் வலுப்படுத்தப்பட வேண்டும்

## மாணவன் கிஷானின் மரணம் தரும் பாடம்

வ. சக்தி

வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் செயற்பாடு, பாடசாலைகளில் வலுப்படுத்தப்பட வேண்டும். அண்மையில், தம்பிலுவில் வித்தியாலய மாணவன் சிவபாலன் கிஷான், சகமாணவனால் தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளான். இம்மாணவன் எ 13 வயதுடைய சிறுவனாவான். மாணவன் ஒருவனின் ஆக்குரோசம் என்னும் மனவெழுச்சி, எவ்வளவு தூரம் ஆபத்தாக மாறியுள்ளது என்பதை ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. ஆசிரியர்களின் வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள் வலுவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தச் சம்பவம் கோடிட்டுக் காட்டுகின்றது என முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடையம் தொடர்பில் அவர் புதன்கிழமை (09) விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

பாடசாலைகளில்



வழிகாட்டல் ஆலோகைகளுக்கு என்றே ஆசிரிய நியமனங்கள் செய்யப்படுகின்றன. மாணவர்களை வழிப்படுத்துவதற்கான உளவியல் கல்வி, வழிகாட்டல் ஆலோசனைக் கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாணவ மையக் கல்வி தொடர்பான செயலமர்வுகளும் பல செய்யப்படுகின்றன. இருந்தும் இப்படியான மாணவ வன்முறை மூலமாக, சகமாணவன் பாட சாலையில் மரணித்துள்ளான்.

மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலை சமரசம் செய்வதற்கு, சகமாணவர்கள் இல்லாமல் போனதும் துரதிர்ஷ்டமானது. இதில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியது பாடங்கள் அதிகம் உள்ளன.

மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் அவசியமாகவுள்ளன. இனவாதத்தாலும், ஊழல் மோசடிகளாலும் நாடு சிதைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளும் வன்மங்களால், போதைகளால் சிதைக்கப்பட்டால், எதிர்காலம் சூனியமாகிவிடும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

எம்.எல்.எஸ் டீன்

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், அக்கறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் பெண்களுக்கு தையல், கைவினை, மனையியல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

அக்கறைப்பற்று மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இக் கற்கைநெறியில் இணைந்துகொள்பவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. 2023.01.03ஆம் திகதியன்று 17 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன், 10ஆம் தரத்தில் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவராகவும், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று வருடங்களுக்கு மேலாக வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் 2022.12.01ஆம் திகதிக்கு முன்னர் விண்ணபப்படிவத்தை பூர்த்திசெய்து, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பாசிக்குடாவில் 'வர்த்தக மேம்பாட்டு' கருத்தரங்கு இன்று

எம்.எஸ்.எம் ஸாகிர்

வியட்நாம் தூதுவராலயம் ஏற்பாடு செய்துள்ள 'வர்த்தக மேம்பாட்டு' கருத்தரங்கு இன்று (11) மாலை பாசிக்குடா 'அமாயா பீச்' ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தாய் தான் ஹுஸ் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில், கிழக்கு மாகாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னணி தொழில் முயற்சியாளர்கள் 70 பேர் கலந்து கொள்ளவுள்ளதாக கருத்தரங்கின் ஏற்பாட்டாளரும் அக்குறணை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான ஹமீட் ஏ காதர் தெரிவித்தார்.

## தமிழ் மொழி தின போட்டியில் கிழக்கு மாகாணம் முதலிடம்

வி.ரி சகாதேவராஜா

அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில், கிழக்கு மாகாணம் 22 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளது. ஏழு முதலிடங்களையும் ஆறு இரண்டாம் இடங்களையும் ஒன்பது மூன்றாம் இடங்களையும் பெற்று 22 புள்ளிகளைப் பெற்றுள்ளது. அதன்படி, இந்த ஆண்டுக்கான முதலாம் நிலை மாகாணமாக, கிழக்கு மாகாணம் தெரிவாகி உள்ளது.

இம்முறை வடக்கு மாகாணம், 20 புள்ளிகளை பெற்று 02ஆம் இடத்தையும் மேல் மாகாணம் 13 புள்ளிகளைப் பெற்று 03ஆம் இடத்தையும் 12 புள்ளிகளுடன் மத்திய மாகாணம் 04 இடத்தையும் 10 புள்ளிகளுடன் ஊவா மாகாணம் 05 இடத்தையும், 05 புள்ளிகளுடன் சப்பிரகமுவ மாகாணம் 06 இடத்தையும், 03 புள்ளிகளுடன் வடமேல் மாகாணம் ஏழாம் இடத்தையும் பிடித்துள்ளன.

யாழ்ப்பாண விமான நிலையத்தை இயக்க

# அரசாங்கத்துக்கு விருப்பமில்லை

எம். றொசாந்த்

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை இயக்க, அரசாங்கத்துக்கு விருப்பம் இல்லை என்பதே உண்மை என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் புதன்கிழமை (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் , அதனை இயக்குவதற்கு இந்த அரசாங்கம் விரும்பவில்லை. விமான நிலையத்தை இயக்கினால் , தென்னிந்தியாவில் இருந்து நேரடியாக வடக்குக்கு பலர் பயணம் செய்வார்கள் என்பதுடன், கட்டுநாயக்காவில் இருந்து வீதி வழியாக சுமார் எட்டு




மணி நேரத்தைச் செலவழித்து, வடக்குக்கு வர வேண்டி இருப்பதனால், புலம்பெயர் தேசத்தவர்களும், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக தமது பயணத்தை ஒழுங்கமைத்து கொள்வார்கள் என்பதால், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய வருமானம் அதிகரித்துவிடும் என்பதனாலேயே அரசாங்கம் இதை இயக்க விரும்பவில்லை.

விமான நிலையத்தை புனரமைக்குமாறு இந்தியா வழங்கிய 300 கோடி ரூபாய் எங்கே போனது எனவும் தெரியவில்லை. அது மாத்திரமன்றி, விமான நிலையத்தில் இருந்த தொழில்நுட்ப உபகரணங்கள், தளபாடங்கள் உள்ளிட்டவை தெற்கு விமான நிலையங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன.

வரி சலுகை , சேவை கட்டண சலுகை எனப் பல சலுகைகளை வழங்கியும் மத்தள விமான நிலையத்துக்கு எந்த விமானமும் வாராத போதிலும் , யாழ்ப்பாண விமான நிலையத்தில் வசதிகள் எதையும் செய்யாது , கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் ஒத்த வரிகள் சேவை கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இவ்வாறான அதிகரித்த வரிகள், கட்டணங்கள், வசதிகள் அற்ற தன்மை உள்ளிட்ட காரணங்களால்தான் விமான சேவைகளை நடத்த, விமான நிறுவனங்கள் முன் வரவில்லை எனத் தெரிவித்தார்.



## விசுவமடுவில் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு திட்டம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் உள்ள நான்கு முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு வழங்கும் நடவடிக்கையை 'வி.பி.பவுண்டேசன்' நிறுவத்தால் வியாழக்கிமை (09) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'வி.பி. பவுண்டேசன்' நிறுவனத்தின் ஸ்தாபகர் தெய்வேந்திரம் இந்திரதாஸின் ஏற்பாட்டில் 'தமிழ் எய்ட்' நிறுவனத்தின் நிதி அனுசரணையில் விசுவமடு பிரதேசத்தில் நான்கு முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் நிகழ்வு பாரதிபுரம் செந்தாமரை முன்பள்ளியில் 'வி.பி பவுண்டேசன்' நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் வே. கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு வலய முன்பள்ளிகளின் உதவி கல்விப் பணிப்பாளர் கு. சிவசுப்பிரமணியம் 'தமிழ் எய்ட்' நிறுவனத்தின் ஸ்தாபகரும் யாழ்ப்பாணம் ஸ்ரானியன் அணியின் உரிமையாளருமான ஆனால்ட் ஆனந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து



**"ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் என்ற ரீதியில், நான்கு முன்பள்ளி மாணவர்களுக்கும் நாள்தோறும் சத்துணவு வழங்கப்படவுள்ளது. இதில் கடலை, பயறு, சோறு – முட்டை – மரக்கறி, சமபோசா, கௌப்பி உள்ளிட்ட உணவு வகைகள் வழங்கிவைக்கப்படவுள்ளன**

கொண்டு சிறப்பித்தார்கள்.

இதன்படி, ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் என்ற ரீதியில் நிதி ஒதுக்கப்பட்டு, நான்கு முன்பள்ளி மாணவர்களுக்கும் நாள்தோறும் சத்துணவு வழங்கப்படவுள்ளது. இதில் கடலை, பயறு, சோறு - முட்டை - மரக்கறி, சமபோசா, கௌப்பி உள்ளிட்ட உணவு வகைகள் வழங்கிவைக்கப்படவுள்ளன.

## நெடுந்தீவு லக்ஸ்மன் காலமானர்

எம். றொசாந்த்

நெடுந்தீவை சேர்ந்த ஊடகவியலாளர் நாகேந்திரர் லட்சுமண ராஜா நேற்று (10) காலமானார்.

**"ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளரான நாகேந்திரர் லட்சுமண ராஜா, நெடுந்தீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்**



ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளரான 'நெடுந்தீவு லக்ஸ்மன்' என அழைக்கப்படும் நாகேந்திரர் லட்சுமண ராஜா, நெடுந்தீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். தொல்பொருள் திணைக்களத்தின் ஒய்வு நிலை உத்தியோகத்தரும் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள், தேசிய பத்திரிகைகள் என்பவற்றில் சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார்.

## பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களிலும் மணல் அகழ்வு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கண்டாவாளப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாறு, புளியம்பொக்கனை ஆகிய பகுதிகளில் பொரும்போக விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளின் ஊடாகச் சென்று, நெற்றலியாற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வை மேற்கொள்வதாகவும் இதன் காரணமாக, தமது பயிர் நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கை முடிவடைந்த காலப்பகுதியிலும் வயல் நிலங்களில் இருந்து மண் தோண்டி எடுக்கப்பட்டு, வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் இதன் காரணமாக தாம் ஒவ்வொரு வருடமும் வயல்களை மீளப் புனரமைத்து பயிர்செய்கையில் ஈடுபடுவதாகவும் இது தொடர்பாக கனியவளப் பிரிவினர் இப்பகுதிக்கு வந்து, ஒருமுறை பார்வையிட்டு இப்பகுதிகளில் நடைபெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகளின் வேண்டுகோள் விடுத்தனர்.

ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா இன்று (11) மாலை 3 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

**"இன்று (11) மாலை 3 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது**

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் யோக.தயாளன், வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், கருத்துரைகளை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன், சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. செல்வமனோகரன், நன்றியுரையை பரமேஸ்வராக் கல்லூரி போஷகர் கனக.நமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.



# 2 பஸ்கள் மோதின; 10 பேருக்கு காயம்

■ சிவா ஸ்ரீதரராவ்

இரத்தினபுரி - எம்பிலிபிட்டிய பிரதான வீதியின் பெல்வாடிய பிரதேசத்தில் நேற்று (10) காலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த பத்து பேர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டியவில் இருந்து இரத்தினபுரி புதிய நகருக்கு அரச சேவையாளர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த தனியார் பஸ் வண்டியும், இரத்தினபுரி, தெனியாய தனியார் பஸ் வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

எம்பிலிபிட்டிய- இரத்தினபுரி பஸ்ஸின் சாரதியின் அதிக வேகமே விபத்துக்கு காரணமென அறியமுடிகின்றது. இரத்தினபுரி, தெனியாய தனியார் பஸ் வண்டியில் பயணித்தவர்களுக்கே அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவித்த இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மோஹினி எல்லையில் கவனமாக பயணிக்கவும்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

மஸ்கெலியா- சிவனொளிபாதமலை வீதியில் மோஹினி எல்லைக்கு அண்மையில் பாரிய கற்பாறைகள் புரண்டு வீதியில் விழுந்துள்ளமையால் பயணிகளும், வாகனசாரதிகளும் அவ்விடத்தை கடந்துச் செல்லும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் மலைப்பாங்கான இடங்களில் இருந்து பாரிய கற்பாறைகள் புரண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்நிலையில், சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பமாவதற்க்கு முன்னர், வீதிகளில் புரண்டிருக்கும் கற்பாறைகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

2022-2023 சிவனொளிபாதமலை யாத்திரை டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கவனிக்காமையால் கலங்கியது கிணறு

■ ஆ.ரமேஸ்.

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட இராகலை பிரதான நகரில் பொது மக்கள் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள கிணற்றில் உள்ள நீர், பாவனைக்கு உதவாத வகையில் கலங்கி அசுத்தமாக காணப்படுகிறது.

இராகலை நகர வாசிகள் மற்றும் நகருக்கு வெளியிடங்களில் இருந்து வருவோர், பயன்படுத்தும் வகையிலும் நகரின் பொது மலசலக்கூடத்துக்கு தண்ணீர் பெற்றுக்கொள்ளும் வகையிலும், குளிப்பதற்கும் இந்தக் கிணறு வலப்பனை பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ளது.

இராகலை மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள, கிணற்றை வலப்பனை பிரதேச சபை சுத்தம் செய்து பராமரிக்கத் தவறி வருவதாக பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



இந்நிலையில் நகர வாசிகள் குளிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள இந்தக் கிணற்று நீர் கலங்கி அசுத்தமாக காணப்படுவதால் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்தும், பஸ் பிரயாணத்தை மேற்கொண்டும் சூரியகாந்தி சந்தியில் உள்ள குளிக்கும் இடத்தை தாம் நாடவேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, பல வருடங்களாக சுத்தம் செய்யாது அதன் பராமரிப்பை இழந்துள்ள இராகலை நகர் பொது குளிக்கும் இடத்தையும், கிணற்றையும் காலம் தாழ்த்தாது சுத்தம் செய்து தர வலப்பனை பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுயதொழில் வாய்ப்புக்காக கொமர்ஷியல் பகுதியில்

# ஒரு ஏக்கர் காணி

### சபையில் அறிவித்தார் ராஜமணி பிரசாந்த்

■ எஸ்.கணேசன்



கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட வறிய குடும்பங்களின் சுயதொழில் வாய்ப்புக்காக ஓர் ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த், மாதாந்த அமர்வில் உரையாற்றும் போது தெரிவித்தார். தலைவர் உட்பட 13 உறுப்பினர்கள் கலந்து கொண்ட அமர்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

கொட்டகலை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்களின் சுயதொழில் முயற்சிகளுக்காக காணியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அதற்கு அமைய, கொமர்ஷியல் பகுதியில் ஓர் ஏக்கர் காணியைப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பத்திரிகைகளில் கேள்விப் பத்திரம் கோரப்படவுள்ளது. காணியைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள், அதற்கான பணத்தை பிரதேச சபையில் வைப்பிலிட்டு, தாங்களாகவே கடைகளை நிர்மாணித்துக் கொள்ளலாம் அல்லது சபையின் ஊடாக கடைகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும். இதில் எந்தவிதமான அரசியல் தொழிற்சங்க பேதமும் இருக்காது. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்து காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

# கிழிக்காத நடத்துநர்களால் விழிபிதுங்கும் பயணிகள்

■ சுதத் எச்.எம்.ஹேவா


ஹட்டனில் இருந்து பல்வேறு இடங்களுக்கும் குறுகிய தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களில், தங்களின் பயணத்தூரத்துக்கான கட்டணச்சீட்டை நடத்துநர்கள் பெரும்பாலும் வழங்குவதில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள பயணிகள், இதனால் தாங்கள் பல்வேறான அசௌகரிங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

சில பஸ்களில் நினைத்தவாறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. மிகுதி பணமும் தரப்படுவதில்லை. கேட்டால் எதுவுமே பேசாது சில நடத்துநர்கள் சென்றுவிடுகின்றனர் என்றும் பயணிகள் தெரிவித்தனர்.

பயணச்சீட்டை வழங்காத சில பஸ்களின் நடத்துநர்கள், தங்களிடமிருந்து இரண்டு முறை கட்டணத்தை வசூலிப்பதற்கும் முயற்சிக்கின்றனர் என்றும், இதனால் பல சந்தர்ப்பங்களில் தேவையில்லாத வகையில் வாய்த்தர்க்கம் ஏற்படுவதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

சில நடத்துநர்கள் பயணிகளை கடுமையாக திட்டித்தீர்க்கின்றனர். தங்களுடைய பயணத்துக்கான பயணச்சீட்டை வழங்கினால் இவ்வாறு தேவையில்லாத முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

# பாணின் நிறையை விழுங்கும் பேக்கரிகள்




■ மொஹொமட் ஆஸிக

கண்டி, மடவளை நகரத்தில் பல கடைகளில் பொதுவாக நிறை குறைந்த பாண்களே விற்கப்படுவதாக அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவித்தாலும் முறையான நடவடிக்கைகள் எவையும் இதுவரையிலும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இறாத்தல் பாணின் நிறை 350 கிராமாகும். எனினும், மடவள நகரத்திலுள்ள பெரும்பாலான பேக்கரிகள் மற்றும் கடைகளில் சுமார் 275 முதல் 280 கிராம் வரையான நிறையைக் கொண்ட பாண்களே விற்கப்படுகின்றன. குறைந்த நிறையைக் கொண்ட பாணின் நிறையை இலத்திரனியல் தராசு காட்டுகிறது.

சுமார் 275 முதல் 280 கிராம் நிறையைக் கொண்ட பாண்கள், 140 ரூபாய்க்கு விற்கப்பட்ட போதும் தமக்குப் போதுமானதாக இல்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# 2 வீடுகளுக்குச் செல்வதற்கு ரூ.5 இலட்சம் செலவில் வீதி

■ சுதத் எச்.எம்.ஹேவா

இரண்டு வீடுகளுக்குச் செல்வதற்காக, இரண்டு வீடுகளுக்கு இடையில் சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவில் கொங்கிரீட் போடப்பட்டுள்ள சம்பவமொன்று ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் புருட் ஹில் பிரதேசத்தில் ஒரு சிறிய பிரிவுக்கு பயணம் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக, இந்தக் கொங்கிரீட் வீதி, வாகனங்கள் பயணிக்கும் வகையில் போடப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள மக்கள் பயணிக்கும் வகையில் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதாக கூறி, இரண்டு வீடுகளுக்கு இடையில் மட்டும் கொங்கிரீட் போடப்பட்டுள்ளது.



பிரதேச மக்களின் வசதிக்காக இருந்த படிக்கற்களில் இரண்டொரு படிக்கற்களை மட்டுமே நிர்மாணித்துக் கொடுத்துவிட்டு, இரண்டு வீடுகளுக்கும் இடையில் கொங்கிரீட் போடப்பட்டுள்ளது என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அந்த வீதியில் பயணிக்கும் போது பல்வேறானா அசௌகரியங்களுக்கு தாம் முகங்கொடுத்து வருவதாகவும் சில விபத்துகளும் இடம்பெற்றுள்ளன என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

6 மாவட்டங்களில் அனர்த்தம்

# 1,590 பேர் பாதிப்பு

மலையகத்தில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால், 396 குடும்பங்களைச் சேர்ந்த 1,590 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வெள்ளம், மண்சரிவு, பாரிய கற்கள் புரண்டு விழுதல், மரங்கள் முறிந்து விழுந்தமை ஆகிய இயற்கை அனர்த்தங்களுக்குள் சிக்கி இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மத்திய நிலையத்தின் புள்ளிவிவரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வனர்த்தங்களுக்குள் சிக்கி அறுவர் உயிரிழந்துள்ளனர் மற்றும் இருவர் காணாமல் போகியுள்ளனர். அத்துடன், 174 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**“ நாடளாவிய ரீதியில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும். மழைக்காலங்களில் கூடுமானவரை விழிப்பாக இருக்குமாறும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது**

நாடளாவிய ரீதியில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென தெரிவித்துள்ள வானிலை அவதான நிலையம், மழைக்காலங்களில் கூடுமானவரை விழிப்பாக இருக்குமாறும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# இரண்டாம் மொழி பயிற்சி

■ என். ஆராச்சி

புளத்கொஹூப்பிட்டிய பிரதேச செயலாளர் காரியாலயத்தின் மொழி பிரிவின் ஊடாக சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு 12 நாள்கள் தமிழ்மொழி மூலமான பயிற்சிகள் வழக்கப்பட்டன.

இதற்கு நீதியமைச்சு, தேசிய ஒற்றுமை மற்றும் மறுசீரமைப்பு அலுவலகம் ஆகியவற்றின் அனுசரணையில் இந்தப் பாடநெறி நடத்தப்பட்டுள்ளது.



நிறைவில் தமிழ்மொழியில் எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைளை தாங்கியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

# செவ்வாய்க்கிழமை வருகிறது பட்ஜெட்

■ ஆ.ரமேஸ்.

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் (பட்ஜெட்) எதிர்வரும் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தவிசாளர் இராமன் கோபாலகிருஸ்ணன் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை முதன் முறையாக சபையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகளாக இப்பிரதேச சபையின் தவிசாளராக பதவிவகித்த எஸ். கதிர்செல்வன், பதவி விலகியதை தொடர்ந்து அவரின் வெற்றிடத்துக்கே, இராமன் கோபாலகிருஸ்ணன் நியமிக்கப்பட்டார்.



நுவரெலியா மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கு முன் மாதிரியாக அக்கரப்பத்தனை பிரதேச சபையின் எஞ்சியுள்ள காலப்பகுதியில அபிவிருத்திகளை முன்னெடுக்கும் வகையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

இருப்பினும் அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குரிய பிரதான நகரங்களாக டயகம, அக்கரப்பத்தனை, மன்றாசி, மெராயா, லிந்துலை, இரான்வத்த, நாகசேனை ஆகியன காணப்படுகின்றன.

இருந்த போதிலும் சபை ஊடாக நகர் மற்றும் தோட்டப்பகுதி அபிவிருத்திக்காக போதிய அளவு வருவாயை ஈட்டிக்கொள்ள முடியாதுள்ள நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டம் அமையுமென தவிசாளர் நம்பிக்கை தெரிவித்தார்.



# பயிற்சிநெறியின் நிறைவு நாள்

■ சிவா ஸ்ரீதரராவ்

சப்ரகமுவ மாகாண அரச ஊழியர்களுக்கான தமிழ் மொழி பயிற்சி நெறியின் நிறைவு நாள் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் குருவிட்ட புஸ்ஸல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்றது.

அரச கரும மொழி திணைக்களமும் சப்ரகமுவ மாகாண சபையும் இணைந்து மேற்படி பயிற்சி நெறியை நடத்தின.

சப்ரகமுவ மாகாண அரச சேவையை சேர்ந்த 148 பேர் இரண்டு பிரிவுகளாக மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். முதலாவது பிரிவுக்கு 150 மணித்தியாலமும், இரண்டாவது பிரிவுக்கு 200 மணித்தியாலமும் இப்பயிற்சிநெறி நடைபெற்றது.

மேற்படி பயிற்சி நெறி, ஆசிரியர்களான பெனடிக் ஆசிரிவாதம், பி.பரமசிவம், பி.பழனியான்டி ஆகியோர்களால் நடத்தப்பட்டது.

# உற்பத்திச் செலவீனத்தால் விவசாயிகள் விலகினர்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

மரக்கறிகளை உற்பத்திச் செய்வதற்கான செலவுகள் அதிகரித்துச் செல்வதால், மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விவசாயம் செய்வதில் இருந்து விலகியுள்ளனர். இதனால், மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதுடன் கடுமையான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ள நிலையில், சிறிய அளவில் உற்பத்தி செய்யும் விவசாயிகள், மரக்கறி உற்பத்தி செய்வதில் இருந்து விலகிக்கொண்டுள்ளனர். இதனால், மரக்கறிகளின் விலைகள் இன்னுமின்னும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகுமென ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், இரசாய உரத்தின் விலை அதிகரிப்பு மற்றும் வேளாண்மை இரசாயனங்களின் விலை உயர்வு, காலநிலை மாற்றம் ஆகிய காரணங்களால் மரக்கறி உற்பத்தில் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால், சிறிய உற்பத்தியாளர்கள் மரக்கறிகளை உற்பத்திச் செய்வதை கைவிட்டுள்ளனர் என்றார்.

# தமிழ்த் தரப்புக்கு கிடைக்கும் இறுதி சந்தர்ப்பமாக அமையலாம்

உள்வீட்டு பிரச்சினை வீதிக்கு வந்துவிட்டால் பொதுப்பிரச்சினையாகி, குடும்பங்களுக்குள் பல்வேறான கருத்துமோதல்கள் இடம்பெறுவதையும் சில நேரங்களில் குடும்பமே சின்னாப்பின்னமாகி விடுவதையும் ஊர் வழிகளில் நாமெல்லாம் அவதானித்து இருக்கின்றோம். ஆகையால், குடும்பப்பிரச்சினையை கூடிய வரையில் குடும்பத்துக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழர்களின் பிரச்சினை சர்வதேச களத்தில் இருக்கிறது. த்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் தலையீட்டுடன் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்ற கோஷங்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றன. எனினும், உள்ளூர் பொறிமுறையின் கீழ் தீர்வுக்காணப்பட வேண்டும்; தங்களுடைய இறையாண்மைக்குள் யாரும் தலையிடமுடியாதென அவ்வப்போது இலங்கை அரசாங்கம் வலியுறுத்தி வந்துள்ளது.

மாறி,மாறி பதவியேற்ற ஜனாதிபதிகளுடன் தமிழர் விவகாரம் தொடர்பில் அவ்வப்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றாலும், தமிழர் விவகாரம் தொடர்பில் தமிழ்த்தரப்புடன் எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் நேரத்தை ஒதுக்காத ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருந்தார். எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஒரேயொரு தடவை பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

எனினும், தற்போதைய ஜனாதிபதி ரணில், அரசியல் இராஜதந்திரத்தை இலாவகமாக கையாளக்கூடியுவர். தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய போதும்கூட, தென்னிலங்கையில் இனவாதத்தை கக்குவோர், அமைதியாக இருந்தனர். ஆக, ஜனாதிபதி ரணிலின் ஆட்சியின் கீழ், சில விடயங்களை தங்களுக்கு சாதமாக்கிக்கொள்ள முடியும்.

தனது பயணம் வெற்றியளிக்க வேண்டுமாயின் சகலரையும் அணைத்துக்கொண்டு பயணிக்கவேண்டும். அதில், ஜனாதிபதி ரணில் குறியாக இருந்து கனகச்சிதமாக காய்களை நகர்த்திச் செல்கின்றார்.

எகிப்தில் இருந்து நேற்று (10) நாடு திரும்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்துக்குச் சென்று உரையாற்றுகையில், தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கும், சர்வதேசத்தின் தலையீடுகள் இன்றி சுமூகமாகத் தீர்வு காண்பதற்கும் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில், சின்னாபின்னமாகச் சிதறி நிற்கின்றன. தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்திலேனும் ஓரணியில் திரளவேண்டும். அதற்காக, சிவில் அமைப்புகள் பல்வேறான முயற்சிகளை கடந்தகாலங்களில் முன்னெடுத்திருந்தன. அவையெல்லாம் புஷ்வாணமாகிவிட்டன.

ஆக, நிகழ்ச்சி நிரலொன்றை தயாரிப்பதற்காக, சகல தமிழ்க் கட்சிகளும் ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும். 'நான்' என்பதை ஒருபுறமாக ஒதுக்கிவிட்டு, 'நாங்கள்' எனப் பயணித்து, ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அதற்கு தமிழ் சிவில் அமைப்புகளும், தமிழர் தரப்பினரும் முழுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் நல்லதொரு சமிக்ஞை கிடைத்துள்ளது. அதனை இறுகப்பற்றிப்பிடித்து, தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்கான பாதையில் பயணிக்க வேண்டும். அடுத்தடுத்த ஜனாதிபதி தேர்தல்களில் புதுமுகங்கள் வெற்றியீட்டினால், தமிழர்களுக்கான தீர்வுக்கான காலம் நீண்டுவிடும் என்பதை நினைவில் கொள்க!


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானவை என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனதை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 01:
# முசோலினியின் நூறு ஆண்டுகளின் பின்னர்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

அதுவோர் அழகிய நாள்! இலையுதிர்காலம் முழுமையாகத் தன்னை வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தது. அந்த ஒக்டோபர் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையே, கதிரவன் தன் கதிர்களைப் பரப்பி, ஒருவித மகிழ்ச்சியைத் தரும் ஆண்டின் இறுதித் தினமென்பதைப் பலர் அறிவர்.

ஒஸ்லோ நகரின் மத்தியில், குழந்தைகளுக்கான பல செயற்பாடுகளை, அவர்களுடன் நாடக நடிகர்களும் முன்னெடுத்திருந்தனர். வீதிகளில் பல்வேறு நிறங்களினாலான வெண்கட்டிகளால் படங்களை வரைவது, பாடுவது, ஆடுவது விளையாடுவது என்று 'பல்கலைக்கழக வளாகம்' என்று அறியப்பட்ட அப்பகுதி களைகட்டியிருந்தது.

அப்பகுதிக்கு வாத்தியங்களை இசைத்தபடி, கொடிகளைத் தாங்கிய கறுப்புடை அணிந்த மனிதர்கள் ஊர்வலமாக வந்தனர்கள். குழந்தைகளின் செயற்பாடுகளை நிறுத்தி, அவ்விடத்திலிருந்து அவர்களை விரைவாக ஏற்பாட்டாளர்கள் அகற்றினர். அந்த ஊர்வலத்தை மேற்கொண்டவர்கள், அதிவலதுசாரி ஆதரவாளர்கள். அவர்கள் குடியேற்றவாசிகளுக்கு எதிரானவர்கள். தங்களை நவநாசிகள் என்று அழைத்துக் கொள்பவர்கள்.

அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயன்ற நிலையில், பொலிஸாருக்கும் நவநாசிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இறுதியில் 35 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் பலர் நோர்வே நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லையென்றும், அண்டைய ஸ்கன்டினேவிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் காவற்றுறையினர் தெரிவித்தனர்.

இந்நிகழ்வு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த ஒன்றை நினைவுபடுத்தியது. இதை உலகின் ஒரு மூலையில் உள்ள ஒரு ஸ்கன்டினேவிய நாட்டின் தலைநகரில் நிகழ்ந்த தனித்த நிகழ்வாகக் கருத முடியாது. இன்று உலகைச் சூழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவு, பல ஐரோப்பிய நாடுகளில் குடியேற்றவாசிகளுக்கு எதிரான மனநிலையும், அதிவலது தீவிரவாதமும் எழுச்சி பெற்றுள்ளது.

இந்த மனநிலை, நெருக்கடிகளை எதிர்நோக்கும் எல்லா நாடுகளிலும் இன்று பரவுகிறது. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இந்த அதிவலது தீவிரவாதமும் அதனோடு பின்னிப் பிணைந்த தேசியவாத வெறியும், நவநாசிசம் மற்றும் பாசிசம் ஆகியவற்றின் கூட்டுக்கலவையின் ஆபத்துகளையும் எதிர்காலச் சவால்கள் குறித்த முன்னோக்கையும் இத்தொடர் ஆராய விளைகிறது.

முசோலினியின் கதைக்குப் போவதற்கு முன்னர், அண்மைய இரு நிகழ்வுகளை நினைவுகூர்தல் தகும்.

முதலாவது, இஸ்ரேல் பற்றியது. இது முக்கியமானது. ஏனெனில், ஈழத்தமிழர்களை யூதர்களுடன் ஒப்பிடுகின்ற அபத்தம் இன்றும் தொடர்கிறது. கடந்தவாரம், இஸ்ரேலிய பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, அதிவலது தீவிரவாத நிலைப்பாடை உடைய கட்சிகள் ஆட்சியைப் பிடித்துள்ளன. தீவிர வலதுசாரிக் கட்சிகளின் எழுச்சியானது, இஸ்ரேலிய சமுதாயத்தில் அதிகரித்துவரும் தீவிரவாதம் மற்றும் இனவெறியின் வெளிப்பாட்டின் இயல்பான விளைவாகும்.

இஸ்ரேலியர்களால் பாலஸ்தீன மக்கள் பல ஆண்டுகளாக கொலைகள், கைதுகள், குடியேற்றங்கள் போன்ற வடிவங்களில் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இஸ்ரேலிய அரசானது, குடியேற்றவாசிகள் மற்றும் இராணுவத்தினர் பலஸ்தீனியர்கள் மீது எல்லையற்றுக் குற்றங்களைச் செய்ய இலவச அனுமதியை வழங்கியுள்ளது.

இரண்டாவது, முசோலினி பதவியேற்று நூறாண்டுகளுக்குப் பிறகு, முசோலினியைப் பின்பற்றுவதாக வெளிப்படையாக அறிவித்த ஒருவர், தனது தீவிர வலதுசாரி நிலைப்பாட்டுடன் தேர்தலில் வென்று, இத்தாலியில் பிரதமராகியுள்ளார். இது இனி நடக்கச் சாத்தியமான நிகழ்வுகளுக்கான ஒரு முன்னோட்டம் மட்டுமே!

ஒஸ்லோவில் கடந்த மாதம் நடந்த நிகழ்வு நினைவுகூர்ந்த நிகழ்வுக்குத் திரும்புவோம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு, 1922இல் இதேபோன்றதோர் ஒக்டோபர் மாதம், பெனிட்டோ முசோலினியின் துணை இராணுவ கறுப்புச்சட்டைகள், இத்தாலிய தலைநகரில் பிரதம மந்திரி லூய்கி ஃபாக்டாவின் அரசாங்கத்தை கலைக்கக் கோரி அணிவகுத்துச் சென்றனர். ரோம் மீதான அணிவகுப்பு என்பது, பாசிச சக்தியின் அடிப்படை கட்டுக்கதை. இந்தத் துணிச்சலான செயலின் மூலம், இத்தாலிய அரசாங்கத்தின் தலைவராக, வலிமையான முசோலினி தன்னை நிறுவிக் கொண்டார். ஆனாலும் அந்த அணிவகுப்பு ஒரு கேலிக்கூத்து.

முசோலினியின் பாசிசப் படைகள் சில ஆயிரங்களை மட்டுமே கொண்டிருந்தன, பெரும்பாலும் தடிகளாலான ஆயுதங்களை ஏந்தியிருந்தன. அரசப்படைகளுடன் ஏற்பட்ட மோதலில் சிதறி, சேற்றிலும் மழையிலும் மூழ்கின. அவர்களில் அதிகமானோர், தலைநகரில் அரசாங்கப் படைகளால் சுடப்பட்டு, பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். 'குதிரையில் ஏறிய மனிதன்' என்று தன்னைத் தானே வீரனாக அழைத்துக் கொள்ளும் முசோலினி, சுவிஸ் எல்லைக்கு அருகே ஒரு பாழடைந்த அலுவலகத்தில் ஒளிந்து கொண்டார்.

பாசிஸ்டுகளிடம் வெளிப்படையான பலவீனம் இருந்தபோதிலும், அரசாங்கம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு அடையாள எதிர்ப்பை மட்டுமே ஏற்றியது. 'பாசிஸ்டுகள் மீது மிகுந்த அனுதாபத்தைக் கொண்டிருந்த இராணுவம், முசோலியின் ஆட்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்க மறுப்பார்கள் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்' என்று பிரிட்டிஷ் தூதர் குறிப்பிட்டார்.

பேரணி நடைபெற்று 24 மணி நேரத்துக்குள், மன்னர் விக்டர் இமானுவேல், முசோலினியை பிரதமராக நியமித்தார். புதிய சர்வாதிகாரியின் துருப்புகள் இறுதியாக ரோம் நகரை அடைந்தபோது, அவர்கள் வெற்றி அணிவகுப்பில் நுழைந்தனர்.

ரோம் மீதான அணிவகுப்பு என்ற நாடகத்தை விளங்குவதற்கு சில அடிப்படையான உண்மைகளைப் புரிந்து கொள்ளுவது முக்கியம். முசோலினி ஆளும் வர்க்கத்தின் விருப்பத்துக்கு எதிராக அதிகாரத்தை எடுக்கவில்லை, மாறாக, அதன் ஆசீர்வாதத்துடனேயே பெற்றார். அதிகாரத்துக்கான பாசிஸ்டுகளின் பாதை சகிப்புத்தன்மை, பொலிஸ்துறை, அரசியல்வாதிகளின் நேரடியான ஒத்துழைப்பு, தொழிலதிபர்களின் ஆடம்பரமான நிதியுதவி ஆகியவற்றால் அமைக்கப்பட்டது.

இத்தாலிய ஆளும் வர்க்கம் முசோலினியை வரவேற்றது. ஏனெனில், அதன் உறுப்பினர்கள் பாசிஸ்டுகளை பல ஆண்டுகால நெருக்கடி மற்றும் வர்க்கப் போராட்டத்துக்கு தீர்வாகக் கருதினர்,

முதல் உலகப் போர், இத்தாலியை நெருக்கடிக்குள் தள்ளியது. கிட்டத்தட்ட ஆறு மில்லியன் இத்தாலியர்கள் போர்வீரர்களான உள்ளீர்க்கப்பட்டார்கள். 600,000 பேர் கொல்லப்பட்டனர்; 700,000 பேர் நிரந்தரமாக ஊனமுற்றனர். தீவிரமயமாக்கப்பட்ட முனைகளில் இருந்து, விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தங்கள் பணியிடங்களில் இராணுவச் சட்டத்தை நிறுவுவதற்கு எதிராகப் போராடினர்.

1917இல் ரஷ்யப் புரட்சி தொழிலாளர்களை தீவிரமயமாக்கும் நடைமுறை உதாரணத்தை வழங்கியது. போரின் காட்டுமிராண்டித்தனத்தை முடிவுக்குக் கொண்டுவர முதலாளித்துவ அமைப்பை வீழ்த்தியது. 1919-20 ஆம் ஆண்டின் பியென்னியோ ரோஸ்ஸோ (இரண்டு சிவப்பு ஆண்டுகள்) இயக்கத்தின் உச்சத்தின் போது, ஆளும் வர்க்கத்திடம் இருந்து இத்தாலியின் மீதான கட்டுப்பாட்டைப் பறிக்க தொழிலாளர்கள் ஒரு தீர்க்கமான போராட்டத்தைத் தொடங்கினர். அதே நேரத்தில், விவசாயிகள் நிலத்தை கைப்பற்றினர்; பெரிய நில உரிமையாளர்களிடம் இருந்து பாரிய சலுகைகளை கட்டாயப்படுத்தத் தொடங்கினர். உள்நாட்டுப் போர் நெருங்கிவிட்டதாகத் தோன்றியது.

சமூக நெருக்கடி வலதுசாரி தீவிரமயமாக்கலையும் உருவாக்கியது, அது பாசிசத்தை பிறப்பித்தது. இத்தாலிய சோசலிஸ்ட் கட்சியின் ஒரு முக்கிய நபரான பெனிட்டோ முசோலினி, நாடு போருக்குள் நுழைவதற்கு ஆதரவாக அறிவித்ததன் மூலம், அவரது தோழர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். கட்சி முசோலினியை வெளியேற்றியது, அவர் மீது காறி உமிழ்ந்தது. அவரை துரோகி என்று அழைத்தது. நவம்பர் 1914இல், முசோலினி, இத்தாலிய தொழிலதிபர்கள் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் *'Il Popolo d'Italia'* (இத்தாலி மக்கள்) என்ற புதிய வலதுசாரி தினசரி செய்தித்தாளை நிறுவினார். இந்தப் பக்கங்களில், அவரது புதிய யோசனைகள் வடிவம் பெற்றன. அச்செய்தித்தாள் போருக்கான ஆதரவு மற்றும் அவ்வாதரவைச் சீர்குலைக்கும் திறன் கொண்ட சோசலிச இயக்கம் போன்ற அனைத்து சக்திகளுக்கும் விரோதம் ஆகியவற்றையே மூலதனமாகக் கொண்டது.

முசோலினி, ஜனநாயகமே நாட்டை அதன் தலைவிதியை அடைவதில் இருந்து பின்வாங்குகிறது என்ற முடிவுக்கு விரைவாக வரத் தொடங்கினார். இறுதியில் அவர் பாசிசத்தை 'உச்ச ஜனநாயக விரோதம்' என்று விவரித்தார். இதனூடாக ஜனநாயகம் குறித்த வரையறைகளைக் கேள்விக்குள்ளாக்கினார்.

இதன் பின்னணியில், சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் செல்வாக்குப் பெற்ற ஒரு கதையாடலை நினைவுபடுத்தல் பொருத்தம். "இலங்கையை நாங்கள் ஒழுக்கமான சமூகமாக உருமாற்ற வேண்டும். அதுவே வினைத்திறனான சமூகமாய் மலரும். அதற்கு எமது உரிமைகளை இழக்கத் தயாராக இருக்க வேண்டும்" என்று 'வியத்மக' அமைப்பினர் தொடர்ந்து கூறினர்.

அதன் வழித்தடத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை நிகழ்ந்தது. இலங்கைக்கு தேவை ஒரு சர்வாதிகாரியே; ஜனநாயகம் எங்கள் நாட்டு மக்களுக்குச் சரிவராது போன்ற பல உரையாடல்களை நாம் கேட்டிருக்கிறோம். அதன் பலன்களையும் அனுபவித்துள்ளோம். எனவே அதிவலது நிகழ்ச்சி நிரலின் ஆபத்துகள் குறித்து, எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.

## கடிதங்கள்

### மங்கைகொடி குளத்தை புனரமையுங்கள்



வவுனியா, மன்னகுளம் கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள மங்கைகொடி என்ற குளத்தை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

180 குடும்பங்கள் வாழும் கொல்லர் புளியங்குளத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள மங்கைகொடி குளம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்தமையால் திருத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இக்கிராம மக்கள் 1996ஆம் அண்டு காலப்பகுதியில் இருந்து, மங்கைகொடி குளத்தை புனரமைத்துத் தருமாறு கோரியபோதிலும், அது நிறைவேறாத நிலையில், பல அமைச்சர்களிடமும் வடமாகாண சபையிடமும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களிலும் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதுவரையிலும் எவ்வித பலனும் கிடைக்காத நிலையில், இம்மக்கள் ஓர் ஏக்கர் வயல் நிலம் கூட இன்றி வாழ்வதால், குறித்த குளத்தைத் திருத்தம் செய்து தரும் பட்சத்தில், அதன் கீழ் 360 ஏக்கர் வயல் நிலைத்தைத் துப்புரவு செய்து, இரண்டு ஏக்கர் என்ற வீதத்தில் குடும்பத்துக்கு வழங்கினால் விவசாயம் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தையே அடிப்படை வாழ்வாதாரமாகக் கொண்ட இக்கிராம மக்கள், மங்கைகொடி குளத்தைத் திருத்தம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

க. அகரன்

## பேராசிரியர் நாலக ஜயகொடி

# இலங்கைக்கு கீர்த்தி நாமத்தை சேர்த்துள்ளார்



தேசிய மட்டத்திலும், சர்வதேச ரீதியிலும் கல்வி மற்றும் கடல்சார் செயற்பாடுகளில் புகழ்பெற்றவரான பேராசிரியர். (கலாநிதி) கெப்டன் நாலக ஜயகொடிக்கு, அண்மையில் சுவீடனின், மல்மோவில் இடம்பெற்ற World Maritime University (WMU) இன் 2022 பட்டமளிப்பு விழாவின் போது, சிறந்த பழைய மாணவருக்கான கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவிப்பை வழங்கும் தீர்மானத்தை பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையைச் சேர்ந்த வெவ்வேறு நாடுகளின் 30 அங்கத்தவர்கள், International Maritime Organization (IMO), ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் நிர்வாகிகள், சுவீடன் அரசாங்கம் மற்றும் மல்மோ நகரைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் International Maritime Organization (IMO)இன் ஆளுநரும் செயலாளர் நாயகமுமான எச்.ஈ.கிட்டாக் லிம், WMU இன் தலைவர் கலாநிதி. கிளியோப்பட்ரா துவோம்பியா-ஹென்ரி, ஆளுநர் சபையைச் சேர்ந்தவர்கள், WMU ஊழியர்கள் மற்றும் பல விசேட விருந்தினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தெற்காசியாவிலிருந்து இந்த பெருமைக்குரிய விருதைப் பெற்றுக் கொண்ட முதலாவதும் ஒரே நபராக பேராசிரியர் ஜயகொடி திகழ்கின்றார். தலைவரின் இராப்போசண நிகழ்வின் போது பேராசிரியர் ஜயகொடி உரையாற்றுகையில், “இது மிகவும் உயர்ந்த கௌரவிப்பாக அமைந்துள்ளதுடன், எனது தொழில் வாழ்க்கையிலும், பிரத்தியேக வாழ்க்கையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது. அத்துடன், எனது நாட்டுக்கும் (இலங்கை) இந்த நெருக்கடியான காலப்பகுதியில் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.” என்றார். பேராசிரியர் ஜயகொடி கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளதுடன், பேராசிரியராகவும் திகழும் இலங்கையைச் சேர்ந்த ஒரே மாஸ்டர் மரைனராக திகழ்கின்றார்.

World Maritime University இன் தலைவர் கலாநிதி. கிளியோப்பட்ரா துவோம்பியா-ஹென்ரி கருத்துத் தெரிவிக்கையில், “கடல்சார் கல்வியில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியவரும், புகழ்பெற்ற பட்டதாரியையும் கௌரவிப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். நாம் இணைந்து செயலாற்றினால் எமது உலகை எவ்வாறு மாற்றலாம் மற்றும் அனைவருக்கும் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என்பதற்கு பேராசிரியர் ஜயகொடி ஒரு சிறந்த உதாரணமாக அமைந்துள்ளார்.” என்றார்.

கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி (MET) பிரிவில் MSc பட்டத்தை பேராசிரியர் ஜயகொடி, 2001 ஆம் ஆண்டில் WMU பல்கலைக்கழகத்தில் பெற்றார். அதனைத் தொடர்ந்து, கடல்சார் விவகாரங்கள் புலமைக் கல்வியை, சீனாவின் Dalian Maritime University இல் தொடர்ந்திருந்தார். WMU இல் தமது கல்வியைத் தொடர்கையில், மாணவர் சம்மேளனத்தின் உப தலைவராக பேராசிரியர் ஜயகொடி திகழ்ந்ததுடன், தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் Malmo Dragon Boat பந்தயத்தில் WMU ஐ பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார். 2001 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான கௌரவிப்பும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவரின் சில பிரதான நியமனங்களில், தேசிய செயலணியின் ஆலோசகர், STCW 2010 இன் நடைமுறைப்படுத்தலில் பெருமளவு ஈடுபாடு அடங்கலாக, Ballast Water Convention இன் IMO நடைமுறைப்படுத்தல், Maritime Training Academy Seychelles மற்றும் Fiji Maritime Academy பணிப்பாளர் சபை பணிப்பாளர், Nautical Institute (NI-UK) இலங்கை கிளையின் தவிசாளர், Chartered Institute of Logistics and Transportation (CILT-UK) இலங்கை கிளையின் உப தலைவர் போன்றன அடங்கியுள்ளன.

CINEC இன் உப தலைவராகவும் பேராசிரியர் ஜயகொடி திகழ்ந்ததுடன், Sri Lanka Association of Non -State Higher Education Institutes இன் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஆலோசகர், உலக வங்கித் திட்டங்கள் அடங்கலாக உயர் கல்வி அமைச்சின் ஆலோசகராகவும் திகழ்ந்தார். நாட்டின் முன்னணி உயர் கல்வி நிலையங்களில் ஒன்றான Saegis Campus இன் உப வேந்தர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக பேராசிரியர் ஜயகொடி திகழ்கின்றார்.

2019 ஆம் ஆண்டில் IES India இனால் இவருக்கு International Leadership Innovation Excellence Award வழங்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் ‘Award of Academic Excellence’ கௌரவிப்பும் வழங்கப்பட்டிருந்தது. கல்விசார் நிபுணத்துவத்தை எய்தும் முன்னர், பேராசிரியர் அனுபவம் வாய்ந்த மாலுமியாக திகழ்ந்ததுடன், பல்வேறு வகையான கப்பல்களை செலுத்தியுள்ளதுடன், 90க்கு அதிகமான நாடுகளுக்கு பயணம் செய்து, பரந்தளவு கலாசாரங்களைச் சேர்ந்தவர்களுடன் பணியாற்றியுள்ளார். Australian Maritime College (AMC) இலிருந்து இவர் கடல்சார் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். இதில் 1994 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் RMIT இடமிருந்து Master Mariner தகைமையும் அடங்கியுள்ளது.

பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச கடல்சார் அமர்வுகளில் பேச்சாளராக பேராசிரியர் ஜயகொடி பங்கேற்றுள்ளார். பரந்தளவு ஈடுபாடுகளினூடாக இலங்கையின் கடல்சார் மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கு பங்களிப்புகளை வழங்கியுள்ளார். Company of Master Mariners of Sri Lanka அடங்கலாக பல்வேறு நிபுணத்துவ அமைப்புகளின் அங்கத்தவராகவும், வாழ்நாள் அங்கத்தவராகவும் இவர் திகழ்கின்றார்.




## Laptop Fiesta இன் வெற்றியாளர்களுக்கு

# SLT-MOBITEL இடமிருந்து மடிக் கணனிகள்

நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக கட்டணப் பட்டியல் கட்டணங்களை செலுத்துவது மற்றும் ரீலோட்களை மேற்கொள்வதை கௌரவிக்கும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL முன்னெடுத்திருந்த Laptop Fiesta நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியாளர்களுக்கு மடிக் கணனிகளை அன்பளிப்புச் செய்திருந்தது.

டிஜிட்டல் இடைவெளியை குறைக்கும் வகையிலும், மாணவர்கள், தொழில்முயற்சியாளர்கள், சிறியளவிலான வியாபாரங்கள் மற்றும் அறிவை நாடுவோருக்கு டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வகையிலும் Laptop Fiesta நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியினூடாக நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்கள் வருடம் முழுவதிலும் கட்டணப் பட்டியல்கள் கொடுப்பனவுகள் மற்றும் ரீலோட்களை மேற்கொள்கின்றமைக்காக, மடிக் கணனியை வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

சென்னை

# முதலிடத்தில் ஜோஹோ




ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை ஈட்டும் முதல் இந்திய நிறுவனமாக ஸ்ரீதர் வேம்புவின் `ஜோஹோ` நிறுவனம் உருவெடுத்துள்ளது.

சென்னையைத் தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் மென்பொருள் நிறுவனமான ஜோஹோ, உலகளாவிய வருவாயில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது என்றாலும், நடப்பு ஆண்டில் அதன் வளர்ச்சி குறையும் என்று நிறுவனத்தின் இணை நிறுவனரும், தலைமை செயற்பாட்டு அதிகாரியுமான ஸ்ரீதர் வேம்பு தெரிவித்தார்.

அத்துடன் பயனர்களுக்கு அதிவேக இணைய வசதிகளை வழங்க அடுத்த 5 ஆண்டுகளில், உலகம் முழுவதும் 100 மையங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜோஹோ நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# சாதனை படைத்தார் அருணா மில்லர்



அமெரிக்காவின் மேரிலேண்ட் மாநிலத்தின் முதல் இந்திய வம்சாவளித் துணை நிலை ஆளுநர் என்ற சாதனையை ‘அருணா மில்லர்‘ படைத்துள்ளார்.

ஆந்திர பிரதேசத்தை பூர்வீகமாக கொண்ட அருணா மில்லர், சிறு வயதிலேயே குடும்பத்தோடு அமெரிக்காவில் குடியேறியுள்ளார்.

இந்நிலையில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அவர் மேரிலேண்டில்அண்மையில் நடைபெற்ற இடைக்கால தேர்தலில் கலந்துகொண்டு வெற்றி பெற்றார்.

அதேபோல், மேரிலேண்டின் ஆளுநராக அக்கட்சியைச் சேர்ந்த வெஸ் மூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

# புதுடெல்லிப் பெண்கள் தள்ளாடுவது அதிகம்



கொரோனாத் தொற்றுப் பரவலின் பின்னர், புதுடெல்லியில் பெண்கள் இடையே மதுபான நுகர்வு 37% அதிகரித்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

‘புதுடெல்லியில் மது போதையில் வாகனம் செலுத்துவோர்‘ குறித்து என்.ஜி.ஓ அமைப்பொன்று மேற்கொண்ட ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

சுமார் 5,000 பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வில் மேலும் பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அந்தவகையில் புதுடெல்லியில் கொரோனாத் தொற்றுப் பரவலின் போது அமுல் படுத்தப்பட்ட ஊரடங்கினையடுத்து பெண்களிடையே மதுபான நுகர்வு அதிகரித்துள்ளதாகவும், குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளில் மது அருந்துவது தங்களிடம் அதிகரித்து உள்ளது என 37.6 சதவீத பெண்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. மேலும் ”ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்ற சலுகை மற்றும் தள்ளுபடி ஆகியவை அதிக அளவில் மதுபானம் வாங்குவதற்கான காரணங்களாக உள்ளன எனவும் 77% பெண்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கொரோனாப் பரவலின் போது ஏற்பட்ட தனிமை, கவலை, தொழில்முறை பொறுப்புகள், மன உளைச்சல் ஆகியவற்றை மறக்கவே மதுப் பழக்கம் அவர்களிடம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கொரோனாவுக்கு பின்னர், ஆண்களை விட பெண்களிடையே அதிக அளவில் மதுப் பழக்கம் அதிகரித்துள்ளதாகவும் குறித்த ஆய்வில் தெரிவித்துள்ளமை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா

## உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக

# இந்தியா உருவாகும்



அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என `Morgan Stanley` நிதி நிறுவனத்தின் பொருளாதார வல்லுநர் சேத்தன் அஹ்யா (Chetan Ahya) கணித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்” GST வரி, சுலபமான ஒன்லைன் பரிவர்த்தனை, தனியார் நிறுவனங்களுக்கு வரி சலுகை, உள்நாட்டு உற்பதியை அதிகரிக்கும் மேக் இன் இந்தியா போன்ற பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளால், வெளிநாட்டு முதலீடுகளும், வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 2027ஆம் ஆண்டு உலகின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது தற்போது 3.4 டிரில்லியன் அமெரிக்க டொலராக உள்ள இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடுத்த பத்தாண்டுகளில் இரட்டிப்பை விட அதிகமாகி 8.5 டிரில்லியன் டொலராக அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒடிசா

# மதுபோதையில் உறங்கிய யானைகள்



மது அருந்திவிட்டு போதையில் யானைகள் உறங்கிய விநோத சம்பவம் ஒடிசாவில் இடம்பெற்றுள்ளது.

ஒடிசா, கியோன்ஜர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தினர் இலுப்பை மரப் பூக்களை நீரில் ஊறவைத்து மக்குவா’ எனப்படும் சாராயத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

இதன்போது அங்கு வந்த சுமார் 24 யானைகள் அங்கிருந்த சாராயத்தைப் பருகியுள்ளதோடு, அங்கிருந்த பானைகள் அனைத்தையும் அடித்து நொறுக்கியுள்ளன. பின்னர் அப்பகுதியிலேயே உறங்க ஆரம்பித்துள்ளன.

இதனையடுத்து குறித்த யானைகளை எழுப்ப அப்பகுதி மக்கள் முயற்சி செய்த போதும் அது, பயனளிக்காததால் வனத்துறையினருக்கு இது குறித்துத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு வந்த வனத்துறையினர் , பெரிய மேளங்களைக் கொண்டு ஒலி எழுப்பியுள்ளனர்.

அவ் ஒலியைக் கேட்டு உறக்கம் கலைந்த ‘கும்பகர்ண’ யானைகள் மீண்டும் காட்டுக்குள் சென்றுள்ளன.

திண்டுக்கல்

# இளையராஜாவுக்கு டாக்டர் பட்டம்



திண்டுக்கல் காந்தி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று (11) நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி, காந்தி பல்கலைக்கழகத்தில் 2018, 2019 ஆண்டுகள் மற்றும் 2019 -2020 ஆம் கல்வி ஆண்டில் பயின்ற மாணவர்களுக்கு பட்டம் வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விழாவில் இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை பிரதமர் மோடி வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமனுக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதமர் வருகையையொட்டி மதுரை விமான நிலையத்தில் நேற்று முதல் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

# அதிகரிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை



பிரித்தானியா மற்றும் வேல்ஸில் வசிக்கும் பிரித்தானியர்கள் அல்லாத இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு மக்கள் தொகையில் கடந்த ஆண்டு 9 ,20 ,000 பேர் இந்தியர்கள் இருப்பதாக பிரித்தானியாவின் தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பிரித்தானியா மற்றும் வேல்ஸில் வசிக்கும் ஆறு பேரில் ஒருவர் அந்நாட்டிற்கு வெளியே பிறந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




காணாமலாக்கப்பட்டோருக்கான

# நீதியை எதிர்பார்ப்பது சரிதானா?

**லக்ஸ்மன்**

காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கோரல் தொடர்ந்தும் கோரப்படுவதாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அரச தரப்பால் முன்வைக்கப்படுகின்ற கருத்துகள், அவர்களுடைய கோரிக்கைகளை மழுங்கடிக்கும் செயற்பாடுகளாகத்தான் இருக்கின்றன.

அவ்வாறான சம்பவம் ஒன்றுதான், படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல்போனமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும், காணாமல்போனோரில் பெரும்பான்மையானோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அல்லது அதற்கு எதிரான குழுக்களாலேயே கடத்தப்பட்டார்கள் என்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த கருத்து தெரிவித்திருந்தார். இது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

இதே நேரத்தில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின், “அடுத்த வருடத்துக்குள் காணாமலாக்கப்பட்டோருடைய பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்” என்ற கருத்து, கொதிப்பைச் சற்றுத் தணிப்பதாக இருக்கிறது. இருந்தாலும் நடைபெற்று வருகின்ற நகர்வுகள் எதுவும், நிம்மதியைத் தரவல்லதாக இல்லை.

இறுதிக்கட்டப்போரின்போது, தமது உறவினர்களைப் படையினரிடம் கையளித்ததாகவும், அவர்கள் காணாமல்போயிருப்பதாகவும், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பல வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோன்று, படையினரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னரும் சரணடைந்ததன் பின்னரும் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த விவரங்களை, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகக் கட்டமைப்புகள் ஆவணப்படுத்தியுள்ளன. அவைகுறித்து, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் அறியந்திருக்கவில்லையா என்று கேள்வி முனைப்புப்பெற்று எழுகின்றது.

உள்நாட்டிலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்ற உலகநாடுகளிலும், நீதி கோரல் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் தொடர்ந்தாலும், யார் அவற்றுக்கான நீதியை வழங்குவது என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது.

சிங்கள பௌத்த பெரும்பான்மை இனம் தமிழ் இனத்தின் வாழ்வியல் உரிமைகளை மறுத்ததன் விளைவான இனமுரண்பாட்டில் உருவான யுத்தம் மௌனிக்கப்பட்டு, 13 வருடங்கள் கடந்தும் நிறைவுக்கு வராத நீதி கோரல், எப்போது முடிவடையப் போகிறது என்பது புரியாப் புதிராகும்.

இருந்தாலும், இன்னமும் தமிழ் மக்கள், தமக்குரிய நீதியை ஐக்கிய நாடுகள் சபை வழங்கும் என்ற ஏக்கமான எதிர்பார்ப்புடனேயே காத்திருக்கின்றனர். ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் மாதத்திலும், செப்டெம்பர் மாதத்திலும் இதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்தே இருப்பதும், நீதி கிடைக்கும் என்ற ஆவல் உச்சம் பெற்றிருப்பதும் வழக்கம்.

அதேபோன்றே மாற்றங்களும் ஏமாற்றங்களும் நிகழ்ந்துவிடுவதும் வழக்கமாகிவிட்டது. கடந்த 13 வருடத்தில் நான்கு ஜனாதிபதிகள் ஆறு பிரதமர்கள் பதவிக்கு வந்துபோயினர். அதே போன்றே அரசாங்கங்களும் மாறிவிட்டன.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம், ஏன் என்பதற்கான கேள்வியே இப்போதைக்கு சாதாரணமானதாகிவிட்டது. அதே போன்றுதான் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளும் இருந்து விடுகின்றன. மிகக் கடுமையான அறிக்கையைப் பேரவையின் ஆரம்பத்தில் விடுவதும் இறுதியில் தீர்மானங்கள் பிசுபிசுத்துப் போவதும் நடந்து கொண்டிருக்கின்றது. இம்முறை சற்று வித்தியாசமாக ஒன்று வந்திருக்கிறது. அதன் நடைமுறை எப்படியிருக்கப்போகிறது என்பது காத்திருப்பை நோக்கியது.

ஆனாலும், காணாமலாக்கப்பட்டோருக்கான நீதிகோரி வடக்கில் நடைபெற்றுவரும் தொடர் போராட்டம் 2,000 நாள்களைத் தாண்டிவிட்டது. அப்போராட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகளும் பலர் இறந்துவிட்டனர். இப்போதும் இந்தப் போராட்டம் தொடர்வது, எதற்காக என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கான பதில் எப்போதுவரைக்கும் அனைவரையும் காத்திருக்க வைக்கும் என்பதே தெரியாததாக இருக்கிறது.

இலங்கைக்கு எதிராக 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டதீர்மானங்கள் இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற வகையிலேயே அமைந்திருக்கின்றன.

நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோரை கண்டறிவதற்கான அலுவலகத்தை நிறுவுதல், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமைக்கான ஆணைக்குழு நிறுவுதல், நீதிக்கான பொறிமுறை, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை நிறுவுதல் ஆகிய நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கிய 25 தீர்மானங்கள் 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் உள்ளடங்கியிருந்தன.

நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு மாறாக, தமிழ் மக்களுக்கெதிரான தொல்பொருள் செயலணி, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளும், பௌத்த மயமாக்கல் முயற்சிகளும் நடைபெறுகின்றன. வெகுஜன ரீதியான போராட்டம், போரில் இறந்தவர்களை நினைவு கூருதல், மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்துதலுக்குக் கூட அனுமதியில்லாத, அவைகளுக்கெதிராக தடையுத்தரவுகளும், வழக்குத்தாக்கல்களும் நடைபெற்றிருந்தன. புதிய ஜனாதிபதியின் பதவியேற்பின் பின்னர் அவை கொஞ்சம் தணிந்திருக்கின்றன.

மனித உரிமை தினம், காணாமலாக்கப்பட்டோருக்கான தினம் என்றெல்லாம் உரிமைகள் ஞாபகப்படுத்தப்பட்டாலும் எதுவும் நடைபெறாத ஒரு நாடாக இலங்கை இருந்து வருகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், இயற்கை வளங்களை சூறையாடுதல், வன வளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் காணி பகிர்ந்தளிப்பு, காணாமலாக்கப்பட்டோர் விடயம், மனித உரிமை மீறல்கள், தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் போர்வையில் சிங்கள மயமாக்கல், மதவழிபாட்டுக்கு தடை விதித்தல், பௌத்த விகாரை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் திட்டமிட்டவாறு விரைவாகவும், சிறப்பாகவும் நடைபெறுகின்றன.

இவ்வாறான நிலையில் 2,000 நாள்களைத் தாண்டி நடைபெற்றுவரும் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரும் போராட்டம் நீதியைப்பெறா, கவனத்திலேயே எடுக்கப்படாத ஒன்றாக நம்மவர்களும் கூட கண்டுகொள்ளாத ஒன்றாக நடக்கும் இப்போராட்டம் எதிர்வரும் வருடத்திலேனும் நீதியைப் பெறவேண்டும் என்று வேண்டிக்கொள்வோம்.

தமிழர்கள் அரசிடம் சரணாகதியடைந்து, உரிமைகளைத் துறந்து, நடந்தவைகளை மறந்து; நடப்பவைகளை காணாது வாழப் பழகிக்கொள்ளல்; இந் நாட்டில் சிறப்பானதொரு வாழ்க்கைக்கான வழி என்பதே சிங்கள அரசாங்கங்களின் எண்ணமாக இருக்கிறது. இந்தச் சிங்கள இனவாத அரசாங்கங்களின் போக்கை கைவிட்டு விட்டு, தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைக்க முயல வேண்டும் என்பது தமிழர்களது எண்ணம். அதனை விடவும் அரசாங்கம் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதும் கூட.

தமிழர்களாகிய நாங்கள் இந் நாட்டின் தேசிய இனம். நாங்கள் இந்த நாட்டில் அடிமையாக வாழ முடியாது. இந்த அரசாங்கத்துக்கு நாங்கள் அடிமைகள் அல்லர். எமக்கு இந்த நாட்டின் உரிமையை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றே தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் தமிழர்கள் போராடுகிறார்கள்.

ஓர் இனம் அஹிம்சை ரீதியாக 25 வருடங்களைத் தாண்டிப் போராடி, ஆயுத ரீதியாக 35 வருடங்களுக்கும் மேலாக யுத்தம் செய்து, இன்னமும் உறைக்காத விடயமாகிப்போன தமிழர்களுடைய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கின்ற காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும். அது தமிழர்களுடைய உரிமைகளையும் மீட்டுத் தரட்டும்.

1956ஆம் ஆண்டுகளிலிருந்தே திட்டமிட்டு இன அழிப்பைச் செய்து கொண்டு தமிழர்களுக்கு எதிராக தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தும் நிலையில், இலங்கை அரசிடம் இருந்து தமிழர்கள் நீதியை எதிர்பார்க்க முடியுமா?



Skills for Inclusive Growth (S4IG) திட்டத்தின் கீழ்

# Welcome Back Better Skills and Tourism

Skills for Inclusive Growth (S4IG) திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட *‘Welcome Back Better Skills and Tourism’* நிகழ்ச்சி, அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அநுராதபுரம் முதலீட்டுச் சபையின் தலைவர், அநுராதபுரம் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர், அநுராதபுரம் மாவட்ட அலுவலக முகாமையாளர், அநுராதபுரம் மாநகர ஆணையாளர், தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர், அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் அலுவலக சிறு தொழிற்றுறை அதிகாரிகள், அரச மற்றும் தனியார்துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர சுற்றுலா வணிகங்களுடன் தொடர்புடைய 60க்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அநுராதபுரம் மாவட்டத்தில், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறையில் திறமை அடிப்படையிலான மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான திட்டங்களையும் பங்களிப்பையும் வழங்கும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினரைச் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிவதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிக்க இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அதன்படி, 2022ஆம் ஆண்டு இறுதிக்குள் தொடங்கும் சுற்றுலாப் பருவத்துக்கு ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறையில் உள்ள சிறு, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான தொழில் முனைவோர் தயாரா? அல்லது, அதைப் பற்றிய சரியான புரிதல் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை விசாரித்தறிவதே இதன் முக்கிய நோக்கம்.

பொருளாதார நெருக்கடியில், ஒவ்வொரு பணிக்கும் பணியாளர்களை நியமித்து தொழில் நடத்துவது கடினம். எனவே, *S4IG* (Skills for Inclusive Growth) மற்றும் *NAITA* ஆகியவை இணைந்து, பல்துறை திறன்வாய்ந்த தொழிலாளியை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த விருந்தோம்பல் திறன்படத் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. இது ஒரு நிலையான வளர்ச்சி உத்தியாகும்.

இந்தத் துறையில் நடத்தப்பட்ட அறிவியல் ஆய்வின்படி, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறையில் உள்ள சிறு, குறுகிய மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு வணிகத்தைப் பற்றிய அறிவு இல்லை என்பது அங்கிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து *‘Business coaching’* வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் இணைந்து ஆலோசனைக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்குகின்றன. ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் பணி புரிபவர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. இங்கே மற்றொரு திட்டம் பாரம்பரிய உத்திகளில் இருந்து விலகி, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் டிஜிட்டல் மயமாக்கலை அறிமுகப்படுத்துவதாகும். இது *E Tourism, E Content, E Marketing, E Distribution, E Operation, E Reputation* என்ற கருத்தின் கீழ் செயற்படுகிறது.

*S4IG* மற்றும் *Sri Lanka Hotel and Tourism Management* நிறுவனம் இதற்காக இணைந்து செயற்படுகின்றன. இத்திட்டம், ஏற்கெனவே பொலன்னறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மாத்தளை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா மற்றும் ஹொட்டல்துறையில் 500க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர் பங்கேற்றனர். இதற்காக, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், சிறுதொழில் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA), தேசிய பல்கலைக்கழக அமைப்பு, இலங்கை ஹோட்டல் சுற்றுலா முகாமைத்துவம் போன்ற பயிற்சி நிறுவனங்கள் போன்ற துறை சார்ந்த அமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன.

அனைவரையும் உள்ளடக்கிய கருத்தின் கீழ், அனைத்து துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். பெண்கள், மாற்றுத்திறனாளிகள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்கள் இதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.











பிரித்தானியா

# அரசர் சார்ள்ஸ் மீது முட்டை வீச்சு

பிரித்தானியாவின் அரசர் சார்ள்ஸ் - ராணி கமிலா மீது முட்டை வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் அரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி ராணி கமிலா நேற்று முன் தினம் (09) அந்நாட்டின் யார்க்ஷெரி மாகாணத்திற்கு அரசு முறை பயணமாக சென்றிருந்தனர்.

இதன்போது அவர்களை வரவேற்க



அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்தனர்.

அப்போது, கூட்டத்தில் இருந்த ஒரு நபர் 'அடிமைகளின் ரத்தத்தால் இந்த நகரம் உருவாக்கப்பட்டுள்ளது' எனக் கூறி சார்ள்ஸ் - கமிலா மீது முட்டையை வீசி தாக்குதல் நடத்தினார். எனினும் குறித்த முட்டை சார்ள்ஸ் மீது விழாமல் தரையில் விழுந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த பொலிஸார் இருவரையும் பத்திரமாக அழைத்துச் சென்றனர்.

இதனை தொடர்ந்து முட்டை வீசி தாக்குதல் நடத்திய 23 வயதான கல்லூரி மாணவனைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



அமெரிக்கா

## மகனின் குழந்தையைச் சுமந்த தாய்

பெண்ணொருவர் தனது மகன் மற்றும் மருமகளுக்காக குழந்தையொன்றைப் பெற்றுக் கொடுத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த 56 வயதான நான்சி என்பவரே இவ்வாறு தனது சொந்த மகனுக்கு வாடகைத் தாயாக இருந்து குழந்தையொன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார்

நான்சியின் மகன் ஜெஃப் மற்றும் அவரது மருமகள் கேப்ரியலுக்கு ஏற்கனவே வெரா, அய்வா என்ற இரட்டைக் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டும் அவர்கள் டைசல் மற்றும் லூக்க என்ற இரட்டைக் குழந்தைகளை செயற்கை கருத்தரிப்பு முறையில் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து கேப்ரி தனது கருப்பையை நீக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார்.

இதனால் அவர்கள் தொடர்ந்து குழந்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. எனவே ஜெஃப்-கேப்ரியா தம்பதியின் அடுத்த பெண் குழந்தையான ஹன்னாவை நான்சி பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந்நிலையில் "ஹன்னாவை எங்கள் குடும்பத்திற்கு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்" என்று நான்சி மற்றும் அவரது கணவர் ஜேசன் தெரிவித்துள்ளனர்.

மேலும் தனது மகனுக்கு குழந்தை பெற்றுக்கொடுத்த அனுபவத்தை புத்தகமாக எழுதப்போவதாகவும் நான்சி தெரிவித்துள்ளார்.

மாலைத்தீவு

### மாலைத்தீவில் அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ

## 10 பேர் உயிரிழப்பு

மாலைத்தீவின் தலைநகர் மாலேயில், கட்டடமொன்றில்நேற்றைய தினம் (10) ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வசிக்கும் கட்டடமொன்றிலேயே இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை

இந்நிலையில் இவ்விபத்தில் 9 இந்தியர்களும் ஒரு பங்களாதேஷ் பிரஜையும் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





சீனா

## பார்வையாளர்களை வழிநடத்தும் ரோபோக்கள்

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச இறக்குமதி கண்காட்சியில், பல பணிகளை ஒரே நேரத்தில் செய்யும் ஆற்றல் படைத்த மல்டி-டாஸ்கிங் ரோபோக்கள் பணியமர்த்தப்பட்டுள்ளன.

இவ்ரோபோக்கள் "பார்வையாளர்களை அவர்கள் விரும்பும் அரங்கிற்கு வழிநடத்தி செல்வது, முகக்கவசம் அணியாதவர்கள், தனிமனித இடைவெளி கடைபிடிக்காதவர்களை கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்றும்படி வலியுறுத்துவது, அரங்கில் வீசப்படும் குப்பைகளை அப்புறப்படுத்துவது, கூட்ட நெரிசலை ஒழுங்குபடுத்துவது உட்பட பல பணிகளை மேற்கொண்டுவருகின்றன.

மேலும் அங்குள்ள 46 ரோபோக்களும் ஒன்றோடொன்று தகவல் பரிமாறிக்கொள்ளும் வகையில் புரோகிராம் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா

## இராணுவத்தை வெளியேறுமாறு ரஷ்யா உத்தரவு



உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 9 மாதங்களாக போர் தொடுத்து வருகின்றது.


இப்போரில் உக்ரேனின் பெரும்பாலான பகுதிகளை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், அண்மைக்காலமாகக் கைப்பற்றிய பகுதிகளை ரஷ்ய அரசு தம்முடன் இணைத்து வருகின்றது.

ரஷ்யாவின் இச் செயல் சர்வதேச சட்டத்தை மீறும் செயலாக உள்ளது என உலக நாடுகள் கண்டித்து வருகின்றன.

இந்நிலையில் உக்ரேனின் கெர்சனுக்குள் புகுந்த ரஷ்ய இராணுவத்தினர், அங்குள்ள வீடுகளை ஆக்ரமித்துடன் பொருட்களை கொள்ளை அடிப்பதாகவும், பொதுமக்களை காலி செய்யுமாறு உத்தரவிட்டு வருவதாகவும் உக்ரேன் குற்றம் சாட்டி இருந்தது.

அந்த நகரத்தில் 3 லட்சம் பேர் இருப்பதாக கூறப்படுகிறது இந்நிலையில் கெர்சன் நகரில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு ரஷ்யா உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





உக்ரேன்

## 50 லட்சம் ஏக்கர் காடுகளை அழித்த ரஷ்யா

### செலன்ஸ்கி குற்றச்சாட்டு

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 8 மாதங்களுக்கு மேலாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் எகிப்தில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச உச்சி மாநாட்டில் காணொலி வாயிலாக உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி பங்கேற்றார்.

இதன்போது " காலநிலை மாற்றத்துக்கு எதிராக உலகம் போராடுவதை ரஷ்ய போர் தடுப்பதாகவும், திசை திருப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 'ரஷ்ய ஜனாதிபதி புடினின் போர் நடவடிக்கையால் உக்ரேனில் கடந்த ஆறு மாதங்களில் 50 லட்சம் ஏக்கர் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டு இருப்பதாகவும் ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார் .

### இருபதுக்கு - 20 உலகக் கிண்ணம்:

## இந்தியாவை வீழ்த்தி இறுதிப் போட்டியில் இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

அடிலெய்ட்டில் நேற்று நடைபெற்ற இந்தியாவுடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்திலேயே கிறிஸ் வோக்ஸிடம் லோகேஷ் ராகுலை இழந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் அணித்தலைவர் றோஹித்



ஷர்மாவை கிறிஸ் ஜோர்டானிடம் இழந்ததோடு, சூரியகுமார் யாதவ்வையும் சிறிது நேரத்தில் அடில் ரஷீட்டிடம் இழந்தது.

பின்னர் விராட் கோலியை 50 (40) ஓட்டங்களுடன் ஜோர்டனிடம் இழந்த இந்தியா, இறுதிப் பந்தில் ஜோர்டனிடம் வீழ்ந்த ஹர்டிக் பாண்டியாவின் 63 (33) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, அலெக்ஸ் ஹேல்ஸின் ஆட்டமிழக்காத 86 (47), பட்லரின் ஆட்டமிழக்காத 80 (49) ஓட்டங்களோடு 16 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹேல்ஸ் தெரிவானார்.

இந்நிலையில், மெல்பேணில் நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை இங்கிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.





### வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்று

## நிந்தவூர் அல் – அஷ்றக் கபடி அணியினர் வரலாற்று சாதனை

எம்.எஸ்.எம். ஸாகிர்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் கேகாலையில் அண்மையில் நடைபெற்ற கபடித் தொடரில், நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலையின் 17 வயது கபடி அணியினர் வெள்ளிப் பதக்கமும், 20 வயது கபடி அணியினர் வெண்கலப் பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளனர்.

வரலாற்றில் முதல் முறையாக இரு வயதுப் பிரிவு கபடி அணிகளும் அகில இலங்கை மட்டத்தில் பதக்கம் வென்று சாதனை படைத்து வரலாற்றில் தடம் பதித்துள்ளனர்.

இவ்வகையில் இவ்வெற்றிக்கு காரணமாக இருந்த மாணவர்களையும் பயிற்சிகள் வழங்கிய பயிற்றுவிப்பாளர்களும் ஆசிரியர்களுமான ஏ. ஹலீம் அஹ்மத், எம்.எஸ்.எம். சபீர், ஏ.எம். அன்ஸார், இன்பாத் மௌலானா, ஆகியோருக்கும் விளையாட்டுக் குழு ஆசிரியர்களுக்கும், வீரர்களின் பெற்றோர்களுக்கும் கல்லூரியின் அதிபர் ஏ. அப்துல் கபூர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை, பல வழிகளிலும் உதவிகள் புரிந்த பழைய மாணவர்கள் சங்க மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

### ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:

## வெளியேற்றப்பட்ட டொட்டென்ஹாம், ஆர்சனல், செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் (ஈ.எப்ஃ.எல்) கிண்ணத் தொடரிலிருந்து டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், ஆர்சனல், செல்சி ஆகியன வெளியேற்றப்பட்டுள்ளன.

நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான மூன்றாவது சுற்றுப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்று தொடரிலிருந்து டொட்டென்ஹாம் வெளியேறியிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் தோற்ற ஆர்சனலும் தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

இந்நிலையில், மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்ற செல்சியும் தொடரிலிருந்து வெளியேறியது.



## உலகக் கிண்ண பிரான்ஸ் குழாமில் ர:.பேல் வரான்

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கான பிரான்ஸ் குழாமில், காயத்திலிருந்து குணமடைந்து வரும் பின்களவீரரான ரஃபேல் வரான் இடம்பெற்றுள்ளார்.

25 பேர் கொண்ட குழாமையே பிரான்ஸின் பயிற்றுவிப்பாளர் டிடியர் டெஷம்ஸ் அறிவித்த நிலையில், காயம் காரணமாக போல் பொக்பா, என்கலோ கன்டே ஆகியோர் இடம்பெறவில்லை.

குழாம்: அல்போன்ஸே அரியோலா, ஹியூயோ லோரிஸ், ஸ்டீவ் மன்டானா, லூகாஸ் ஹெர்ணாண்டஸ், தியோ ஹெர்ணாண்டஸ், பிரஸ்னல் கிம்பெம்பே, இப்ராஹிமா கொனட்டே, ஜுலெஸ் கூன்டே, பெஞ்சமின் பவார்ட், வில்லியம் சலிபா, டயோட் உபமெகனோ, ரஃபேல் வரான், எடுவார்டோ கமவிங்கா, யூசுஃப் பொபனா, மட்டியோ குன்டோஸி, அட்ரியன் றபியொட், ஒரெலின் டொச்சுமெனி, ஜோர்டான் வெரெடௌட், கரிம் பென்ஸீமா, கிங்ஸ்லி கோமன், உஸ்மான் டெம்பிலி, ஒலிவியர் ஜிரூட், அந்தோனி கிறீஸ்மன், கிலியான் மப்பே, கிறிஸ்டோபர் என்குங்கு

## உலகக் கிண்ணத்துக்கான குரோஷியக் குழாமில் மோட்ரிச்



கட்டாரில் இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கான குரோஷியக் குழாமில் 37 வயதான மத்தியகளவீரரான லூகா மோட்ரிச் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை 33 வயதான முன்களவீரரான இவான் பெரிசிச், 28 வயதான மத்தியகளவீரரான மட்டியோ கொவாசிச் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: டொமினிக் லிவகோவிச், இவிகா இவுசிச், இவோ ஜிர்பிச், டொமகொஜ் விடா, டெஜான் லொவ்ரன், பொர்னா பரிசிச், ஜோசிப் ஜுரனோவிச், ஜொஸ்கோ கவர்டியோல், பொர்னா சொஸ்ஸா, ஜோசிப் ஸ்டனிசிச், மார்டின் எர்லிச், ஜோசிப் ஸ்வாடாலோ, லூகா மோட்ரிச், மட்டியோ கொவாசிச், மார்செலோ பிரஸ்னோவிச், மரியோ பஸ்காலிச், நிகொலா விளாசிச், லொவ்ரோ மஜர், கிறிஸ்டியன் ஜகிச், லூகா சுசிச், இவான் பெரிசிச், அன்ட்ரே கிரமரிச், ப்ரூனோ பெட்கோவிச், மிஸ்லவ் ஒர்சிச், அன்டெ புடிமிர், மார்கோ லிவஜா.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 11 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.